# விபச்சாரம்

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

விவாகமாகாமல்
ஒரு குழந்தை
பிறந்தால், அது
இரட்சிக்கப்படக்
கூடுமா, அல்லது
எடுத்துக்
கொள்ளப்படுதலில்
செல்ல முடியுமா?

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

### உபாகமம் 23:2

---

**வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.**



செய்தி: **கேள்விகளும் பதில்களும்,**
ஆகஸ்டு 23, 1964 மாலை,
ஜெபர்சன்வில், இந்தியானா,
அமெரிக்கா

**308. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, விவாகமாகாமல் ஒரு குழந்தை பிறந்தால், அது இரட்சிக்கப்படக் கூடுமா, அல்லது எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்ல முடியுமா?**

186. இரட்சிக்கப்படக் கூடுமா? ஏன் நிச்சயமாக, நான் விசுவாசிக்கிறேன் அந்த குழந்தை... நடந்த ஒரு காரியத்துக்கு அந்த குழந்தை பொறுப்பல்ல. அது உண்மை. ஆனால் நான்...

எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லும் விஷயத்தில்... **இரட்சிக்கப்படக் கூடுமா**

என்னும் விஷயத்தில் நான் “ஆம்“ என்பேன். ஆனால் எடுத்துக் கொள்ளப்படுதல் என்னும் விஷயத்தில், தெரிந்து கொள்ளப்பட்ட வித்து தான் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்கின்றது.

விபச்சாரத்தினால் உண்டாகும் குழந்தை தெரிந்து கொள்ளப்பட்ட வித்து என்பதை என்னால் நம்ப முடியாது. உங்களுக்குப் புரிகிறதா? பாருங்கள்?

அந்த குழந்தை இரட்சிக்கப்படக் கூடுமென்று நான் நம்புகிறேன்; அந்த குழந்தை இதற்கு பொறுப்பல்ல. அது பயங்கரமான ஒரு செயல்.

187. இப்பொழுது, பழைய ஏற்பாட்டில், முறை தவறிப் பிறந்த குழந்தை கர்த்தரின் சபைக்குள் பத்து தலைமுறைக்கு பிரவேசிக்கக் கூடாது – அதாவது நானூறு சொச்சம் ஆண்டுகளுக்கு.

**அந்த சாபம் அவ்வளவு கொடியது.** அதை யோசித்துப் பாருங்கள். ஒன்றும் அறியாத குழந்தை, **அதன் பத்து தலைமுறை பேரப் பிள்ளைகள் கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாது.** அது உண்மை.

188. ஆனால் பாருங்கள், அந்த பாவத்தை மன்னிப்பதற்கு வலிமையான எதுவும் இருக்கவில்லை.

பழைய ஏற்பாட்டின் இரத்தம் (பழைய உடன்படிக்கை இரத்தம்) பாவங்களை மன்னிக்கவில்லை; அது பாவங்களை மூடினது.

**ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தமோ அதை புறம்பாக்குகிறது. இப்பொழுது அது வித்தியாசமாயுள்ளது.**

**இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வரும் போது, அது வித்தியாசமடைகிறது.**

கலப்பு செய்தல் எப்பொழுதுமே கர்த்தரால் சபிக்கப்பட்ட ஒன்று. கலப்பு மார்க்கத்திலிருந்து விலகி நில்லுங்கள். அதை கலக்காதீர்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# உபாகமம் 23:2

**வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.**



## செய்தி: **பிரதிநிதித்துவத்தின் மூலம் ஆக்கினை (கலப்பு மார்க்கம்),**
Jeffersonville, Indiana, USA, 60-11-13

44. ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை என்று இயேசு கூறினார், ஆதியில் அப்படி இருக்கவில்லை.

**ஒவ்வொரு விதையும் தன் ஜாதியை முளைப்பிக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருந்தது.**

**ஆனால் நாமோ எல்லாவற்றையும் கலப்பு செய்து தேவனுடைய திட்டத்தை பாழாக்கிவிட்டோம்.**

ஒரு வயலட் பூவை எடுத்துக் கொள்வோம். அது முதலில் வெள்ளை நிறமாயிருந்தது. அதை தனியே விட்டுவிட்டால் அது எப்பொழுதும் வெள்ளை நிறமுள்ள பூவாகவே இருக்கும். அதை அவ்வாறே நீங்கள் வளர்க்க

வேண்டும். தேவன் விதவிதமாக படைக்கிறவர். அது விதவிதமாக இருக்க விரும்புகிறார்.

**ஆனால் கலப்பு செய்தல் ஆபத்தானதும் கண்டிக்கப்பட வேண்டியதுமான செயலாகும்.**

**அது தேவனுடைய திட்டத்தை பாழாக்குகிறது. அது மனித குலத்தை பாழாக்குகிறது.**

“**வேசிப்பிள்ளை கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது**” என்று கர்த்தர் உபாகமத்தில் கூறியுள்ளார்.

**விபசாரம் அவ்வளவு மோசமானது – பத்து தலைமுறை வரைக்கும், பத்து தலைமுறையை நாற்பது ஆண்டுகளால் பெருக்கினால் நானூறு ஆண்டுகள் வரைக்கும் – கலப்பில் பிறந்த ஒருவன்.**

45. **ஒரு மனிதனை விவாகம் செய்துள்ள ஸ்திரீ, அல்லது ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துள்ள ஒரு மனிதன், தங்கள் பரிசுத்த விவாக இணைப்பை மீறி, முறை தவறிப்**

**பிறந்த குழந்தையை தோன்றச் செய்தால் அது பத்து தலைமுறை வரைக்கும் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படாது.** உபாகமம்: 23:2

சரி. முறைதவறிப் பிறந்த பிள்ளை, அதற்கு அடுத்த தலைமுறை, அதற்கு அடுத்த தலைமுறை, அதற்கு அடுத்த தலைமுறை உள்ளே வரமுடியாது.

அவர்கள் ஏசாவைப் போல் அழுது ஒரு இடத்தைக் கண்டுபிடிக்க விழைந்தாலும், பத்து தலைமுறை கடந்து செல்ல வேண்டும் – ஒரு தலைமுறைக்கு நாற்பது ஆண்டுகள்.

இந்த கண்டிக்கப்படத்தக்க, அசுத்தமான உலகம் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாயுள்ளதை உங்களால் காண முடிகிறதா? பொல்லாப்பு நிறைந்தது – தேவன் இணைத்ததை மீறி, மீறிச் செல்லுதல்.

ஒரு ஸ்திரீ தன் கணவனுக்கு விரோதமாக வாழ்க்கையில் ஈடுபட்டு, ஒரு கணவன் தன் மனைவிக்கு விரோதமாக அசுத்தமான

வாழ்க்கையில் ஈடுபட்டு கலப்பு பிள்ளையை தோன்றச் செய்தல்.

ஓ, அந்த ஸ்திரீ, "அவன் அழகாயிருக்கிறான் அல்லவா? பெரிய உருவம் கொண்டவன், உயரமானவன்" எனலாம். அப்படித்தான் ஏவாளும் நினைத்திருப்பாள். அவள் கலப்பு பிள்ளையை பெற்றாள். அவன் தான் காயீன். காயீனின் மூலம் இராட்சதர் தோன்றினர்.

**கலப்பு செய்தல் எப்பொழுதுமே கர்த்தரால் சபிக்கப்பட்ட ஒன்று. கலப்பு மார்க்கத்திலிருந்து விலகி நில்லுங்கள். அதை கலக்காதீர்கள்.**

46. "கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால்" என்று இயேசு கூறினார். அவர் ஏன் கடுகு விதையில் பிரியம் கொண்டார்?

பசலைக் கீரையை (Spinach) கேல் (kale) செடியுடன் சேர்த்தால் ரேப் (rape) செடி கிடைக்கிறது. (ரேப் செடி ஆடுகள் விரும்பித் தின்னும் ஒரு செடி. அதன் வித்துக்களிலிருந்து

எண்ணெய் எடுக்கப்படுகின்றது – தமிழாக்கியோன்).

**ஆனால் கடுகு செடியோ வேறொன்றுடனும் கலவாது - உண்மையான கடுகு செடி. அதை உங்களால் கலப்பு செய்யமுடியாது. அது கடுகாகும்.**

**அவ்வாறே தேவனுடைய ஆவியினால் பிறந்தவர்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கின்றனர். அவர்கள் உலகத்துடன் கலப்பதில்லை.** அவர்கள் கலப்புள்ளவர் அல்ல. அவர்கள் தேவனுடன் நிலைத்திருக்கின்றனர், அவருடைய திட்டத்துடன் நிலைத்திருக்கின்றனர், அவருடைய ஆவியுடன் நிலைத்திருக்கின்றனர். அவர்களுக்கு கலப்பு எதுவும் தேவையில்லை.

**மற்ற சபைகள் எவ்வளவு பெரிதாகவும் நாகரீகமுள்ளதாகவும் இருந்தாலும், சபையார் நாகரீகமுள்ளவர்களாகவும் பகட்டாகவும் இருந்தாலும், அவர்கள் திரளாக இருந்தாலும், இவர்கள் சிறிதேனும்**

**கவலை கொள்வதில்லை. அது அவர்களைப் பாதிப்பதில்லை.**

“இருதயங்கள் கொழுந்து விட்டு எரியும் வேளையில், கர்த்தாவே, நான் காத்திருக்க எனக்கு கற்றுக் கொடும்” என்னும் பாடல் எனக்கு எப்பொழுதுமே பிடிக்கும் – அவர்கள் பெரிய கட்டிடங்களைக் கட்டி கொண்டு, பெரிய காரியங்களில் ஈடுபட்டுள்ள வேளையில்...

இருதயங்கள் கொழுந்து விட்டு எரியும் வேளையில் கர்த்தாவே காத்திருக்க எனக்கு கற்றுக்கொடும்

என் பெருமையை அகற்றி என்னைத் தாழ்த்தி உம்முடைய நாமத்தை சொல்லி கூப்பிடுவேனாக

மற்றவர்கள் செய்வதில் நான் சார்ந்திராமல் உம்மிடத்திலிருந்து உத்தரவு வரும் வரைக்கும் ஜெபத்தில் காத்திருக்க எனக்குக் கற்றுக் கொடும்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புது பெலனடைந்து கழுகைப் போல் செட்டைகளையடித்து எழும்புவார்கள்

அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்

ஓ கர்த்தாவே, காத்திருக்க எனக்குக் கற்றுக் கொடும்.

★★★★★

# விபச்சாரமானது பயங்கரமான ஒரு காரியமாகும்!


## உபாகமம், 23ஆம் அதிகாரம் 2வது வசனம் விவாகத்திற்கு அப்பாற்பட்டு பிறந்த ஒரு மனிதன் இரட்சிக்கப்பட முடியாது என்று போதிக்கிறதா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## உபாகமம் 23:2

**வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.**



## செய்தி: **தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல்,** ஜுலை 23, 1961, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

*142.* **உபாகமம், 23ஆம் அதிகாரம் 2வது வசனம் விவாகத்திற்கு அப்பாற்பட்டு பிறந்த ஒரு மனிதன் இரட்சிக்கப்பட முடியாது என்று போதிக்கிறதா? "தேவன் பெற்றோர் செய்த அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்" என்று கூறுகிறதே. இது என்னவென்பதை விளக்கவும்.**

100. சரி. விபச்சாரமானது வேதாகம காலத்திலே ஒரு பயங்கரமான காரியமாக இருந்தது, ஒரு மனிதன் தன்னுடைய மனைவியாக அல்லாதிருக்கிற ஒரு பெண் மூலமாக ஒரு குழந்தையை பெறுவானானால், அந்த பிள்ளை, அந்த பிள்ளையினுடைய பிள்ளைகளிடத்திலும், அதனுடைய

பிள்ளைகளிடத்திலும், நாலு தலைமுறைகளுக்கு, நானூறு மற்றும் அதற்கும் பிறகான வருடங்களுக்கு கர்த்தருடைய சபைக்குள்ளாக வரவே முடியாது,

ஏனெனில் காளை மற்றும் வெள்ளாட்டு கடாக்களின் இரத்தமானது பாவத்தை எடுத்துப் போட போதுமானதாக இருக்கவில்லை. அதனால் பாவத்தை புறம்பாக வைக்க அல்லது மூடத்தான் முடியும். அதனால் பாவத்தை வெளியே எடுத்துவிட முடியாது. பாருங்கள்? அதனால் பாவத்தை வெளியே எடுத்து விட முடியவில்லை, அதனால் பாவத்தை மூடத்தான் முடிந்தது.

விபச்சாரமானது பயங்கரமான ஒரு காரியமாகும்!

101. ஒரு பெண், விலையேறபெற்ற ரத்தினமாவாள், அவள் ஒரு தாயாக இருக்கும்படியாக தேவன் அவளை உண்டாக்கினார், தாய்மைத்துவத்தை அவளிடம் ஒப்படைத்தார்.

ஆனால் அவளோ தன் புருஷனல்லாத மற்றொரு மனிதனுக்கு ஒரு பிள்ளையைப் பெறுவாளானால், அப்பொழுது அந்த பிள்ளையின் மீதும், அதனுடைய பிள்ளைகள் மற்றும் அதனுடைய பிள்ளைகள், மற்றும் அதனுடைய பிள்ளைகளிடத்தில் மூன்று மற்றும் நான்கு தலைமுறைகளுக்கு சாபமானது இருக்கும்.

அநேக சமயங்களில் பால்வினை கிரந்தி நோய்கள் மற்றும் – மற்றும் குருட்டாட்டங்கள், மக்கள் மேல் வந்தது. ஆம் ஒரு பெண், பரிசுத்த விவாகத்திற்கு அப்பாற்பட்டு ஒரு குழந்தையை பெற்றெடுப்பாளானால் அது ஒரு பயங்கரமான, பயங்கரமான காரியமாகும்.

கவனியுங்கள், அப்பொழுது மாத்திரமல்ல, இன்னுமாக அது ஒரு பயங்கரமான செயலாகும், நிச்சயமாக எப்பொழுதுமே அவ்விதமே.

★★★★★

# புதிய சிருஷ்டிகள்!



## உபாகமம் 23:2

**வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம் தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது.**



# செய்தி: **பத்து கன்னிகைகள்,** டிசம்பர் 11, 1960, இந்தியானா, அமெரிக்கா

41. அன்றொரு நாள், அதைப்பற்றி ஒருவருக்கு கேள்வியுண்டாயிற்று. "கலப்படமான மார்க்கம்" என்ற தலைப்பில் நான் பிரசங்கித்தபோது (உரைக்கப்பட்ட வார்த்தை வால்யூம் 2, எண். 13 - ஆசி.) நான் குறிப்பிட்ட ஒன்றின் பேரில் எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

வேதமானது முறைதவறிப் பிறந்த குழந்தை, அதாவது வேசிப்பிள்ளை, கர்த்தருடைய சபையில் பத்து தலை முறைகளுக்கு பிரவேசிக்கலாகாது என்று கூறப்பட்டுள்ளதைக் குறித்து நான் அச்செய்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

பத்து தலைமுறையென்றால், 400 ஆண்டுக்காலமாகும்; அவ்வளவு காலத்திற்கு முறைதவறிப் பிறந்த குழந்தையும் அதன்

தலைமுறையினரும், கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. கலப்படமாய் பிறத்தல் அவ்வளவு மோசமான விளைவை உண்டாக்குகிறது.

ஒரு குழந்தையானது, அதன் தாய், தன் புருஷனோடு சேராமல் அந்நிய புருஷனோடு சேர்வதினால் உண்டாகிப் பிறந்ததாய் இருக்குமானால், அதுவே கலப்படமாய்ப் பிறந்த குழந்தையாகும்.

அக்குழந்தை தன் தகப்பனாயிருக்க வேண்டியவருக்குப் பிறக்காமல், தன் தாய் அந்நிய புருஷனோடு சேர்ந்ததினால் பிறந்ததாயிருக்கும்.

பாருங்கள்? அது தேவனுக்கு முன்பாக மிகுந்த தீமையானதாக இருந்தது. தேவனுக்கு முன்பாக சரியான வித்து மீண்டும் தோன்றிட பத்து தலைமுறைக்காலம் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

42. ஆனால் அது இந்தக் காலத்திற்கு பொருந்துவதாயிருக்காது. இப்பொழுது உங்களுக்கு புதிய பிறப்பு உண்டாயிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர்களுக்கு ஒரே பிறப்புதான் உண்டாயிருந்தது. அதுவும் இனச்சேர்க்கையினால் பிறப்பிக்கப் பட்டவையாயிருந்தது.

இப்பொழுது நமக்கு புதிய பிறப்பு உண்டாயிருக்கிறது. அது ஆவிக்குரியதாயுள்ளது, அதுதானே தெரிந்தெடுக்கப்பட்டவர்களை பிறப்பிக்கிறது.

நாம் கிறிஸ்து இயேசுவிலே, தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்த புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம். புதிய சிருஷ்டிகள்!

இந்த சிருஷ்டி என்ற வார்த்தையை இங்கேயுள்ள நல்ல கல்விமான்களா யிருக்கிறவர்கள் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் அதைப்பற்றி கவனிக்கவில்லையெனில், அதைப்பற்றிப் பாருங்கள்.

சிருஷ்டி என்ற வார்த்தை கிரேக்க மொழியில் 'ஒரு புதிய சிருஷ்டி' என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. ஓ, நீங்கள் இவ்வுலகில் இனச் சேர்க்கையினால் பிறந்து

மாம்சத்தில் இருக்கையிலேயே, விண்ணுக்குரிய பிரகாரமாக ஒரு புதிய சிருஷ்டியாகவும் பிறந்தவர்களாயிருக்கிறீர்கள். ஒரு புதிய மனிதனை சிருஷ்டிக்கும் தேவனுடைய புதிய படைப்பாக அது இருக்கிறது.

புதிய சிருஷ்டி என்பது ஒரு பிறப்பாகும். மாம்சத்தில் பிறப்பதற்கு பிறப்பு எப்படி அவசியமோ, அவ்வாறே, ஆவிக்குரிய பிறப்பும் இருக்க வேண்டும். மாம்சத்தின் பிறப்பைப் போலவே, ஆவிக்குரிய பிறப்பும் அவசியமாயிருக்கிறது.

43. விவாகம் செய்துகொள்ளும் ஒரு இளம் தம்பதிகள், மணந்து கொண்டு ஒருவேளை இப்படிக் கூறலாம்: "எங்களுடைய முதல் மகனுக்கு 'யோவான்' என்று பெயரிட்டு அழைக்கப் போகிறோம்" என்று அவன் பிறக்கவேயில்லையென்றால், யோவான் என்பவன் அங்கே இல்லவேயில்லை அதேவிதமாகத்தான்... நீங்கள் ஒரு வேளை....

பரலோகத்தைப் பற்றி உங்களுக்கு பல்வேறு புராண கட்டுக்கதையின் படியான

அநேக கருத்துக்கள் இருக்கக்கூடும். அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும், நீங்கள் மறுபடியும் பிறக்காவிடில், நீங்கள் அங்கே இருக்கமாட்டீர்கள். அதுதான் சரி, பாருங்கள். அந்தவிதமாகத்தான் அது இருக்கவேண்டும்.

ஏனெனில், அது பிறப்பின் வழியாகத்தான் சாத்தியமாகும். தேவன் தமது பிரமாணங்களை விதித்துள்ளார். எனவே யாவும் அவருடைய பிரமாணங்களின்படி தான் நடைபெற வேண்டும்.

★★★★★

அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்



# நீதிமொழிகள் 7

1. என் மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.

2. என் கட்டளைகளையும் என் போதகத்தையும் உன் கண்மணியைப்போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.

3. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்.

4. இச்சகவார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கிக் காப்பதற்காக,

5. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப்பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக.

6. நான் என் வீட்டின் ஜன்னலருகே நின்று, பலகணி வழியாய்ப் பார்த்தபோது,

7. பேதையர்களாகிய வாலிபருக்குள்ளே ஒரு புத்தியீன வாலிபனைக்கண்டு அவனைக் கவனித்தேன்.

8. அவன் மாலைமயங்கும் அஸ்தமனநேரத்திலும், இரவின் இருண்ட அந்தகாரத்திலும்.

9. அவள் இருக்கும் சந்துக்கடுத்த தெருவில் சென்று, அவள் வீட்டுவழியாய் நடந்துபோனான்.

10. அப்பொழுது இதோ, வேசியின் ஆடையாபரணந்தரித்த தந்திரமனமுள்ள ஒரு ஸ்திரீ அவனுக்கு எதிர்ப்பட்டாள்.

11. அவள் வாயாடியும் அடங்காதவளுமானவள்; அவள் கால்கள் வீட்டிலே தரிக்கிறதில்லை.

12. சிலவேளை வெளியிலிருப்பாள், சிலவேளை

வீதியிலிருப்பாள்,
சந்துகள்தோறும் பதிவிருப்பாள்.

13. அவள் அவனைப் பிடித்து முத்தஞ்செய்து, முகம் நாணாமல் அவனைப்பார்த்து:

14. சமாதான பலிகள் என்மேல் சுமந்திருந்தது, இன்றைக்குத்தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன்.

15. ஆதலால், நான் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு, உன் முகத்தை ஆவலோடு தேடினேன்; இப்பொழுது உன்னைக் கண்டுபிடித்தேன்.

16. என் மஞ்சத்தை இரத்தின கம்பளங்களாலும்,

எகிப்துதேசத்து விசித்திரமான மெல்லிய வஸ்திரங்களாலும் சிங்காரித்தேன்.

17. என் படுக்கையை வெள்ளைப்போளத்தாலும் சந்தனத்தாலும் இலவங்கப்பட்டையாலும் வாசனை கட்டினேன்.

18. வா, விடியற்காலம்வரைக்கும் சம்போகமாயிருப்போம், இன்பங்களினால் பூரிப்போம்.

19. புருஷன் வீட்டிலே இல்லை, தூரப் பிரயாணம் போனான்.

20. பணப்பையைத் தன் கையிலே கொண்டுபோனான்,

குறிக்கப்பட்ட நாளிலே வீட்டுக்கு வருவான் என்று சொல்லி,

21. தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப் பண்ணினாள்.

22. உடனே அவன் அவள் பின்னே சென்றான்; ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவது போலும்,

23. ஒரு குருவி தன் பிராணணை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில்

விழத்தீவிரிக்கிறதுபோலும், அவளுக்குப் பின்னே போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது.

24. ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

25. உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே.


26. அவள் அநேகரைக் காயப்படுத்தி, விழப்பண்ணினாள்; பலவான்கள் அநேகரைக் கொலைசெய்தாள்.


27. அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி; அது


மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்.


★★★★★


























# பணம், பெண், புகழ்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஒரு மனிதனை கர்த்தர் சிறிதளவு ஆசீர்வதிக்கும் போது மூன்று முக்கியமான காரியங்களான பணம், பெண், புகழ் என்பவை அவனைத் திரும்பவும் அவனுடைய பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றன என்பதை நான் கவனித்திருக் கிறேன். வேதத்தில் பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்பவனுக்கு அதிகமான பணத்தைக் கொடுக்க முன் வந்த போது, அந்த பணத்தின் காரணமாக பிலேயாம் தன்னுடைய வரத்தை விற்றுப் போட்டான் என்று பார்க்கிறோம்** (இச்சம்பவம் உங்களுக்குத் தெரிந்த ஒன்றாகும்)

10. **சிம்சோன், தெலிலாளிடம் தன்னை விற்றுப் போட்டான்.** இந்தப் பெண் அவனை தன் மடியிலிருத்தி, அவன் தன்னிடமுள்ள கர்த்தரின் இரகசியத்தை வெளியிடும் வரை அவனை மயக்கினாள்.

11. **சவுல் புகழுக்காக தேவ வரத்தை விற்றுப் போட்டான்.** அவன் ஒரு தீர்க்கதரிசியா

யிருந்தான். (தீர்க்கதரிசிகளில் ஒருவனாக அவன் எண்ணப்பட்டான் என்று வேதம் கூறுகிறது). **இன்னொருவரைக் காட்டிலும் தன்னை பெரியவனாக்க விரும்பி புகழுக்காக அவன் விழுந்து போனான்.**

12. **மனிதன் விழுந்து போகத் தக்கதான இந்த மூன்று முக்கியமான காரியங்களை நான் வேதத்திலிருந்து கண்டு, எல்லா நேரங்களிலும் இந்த மூன்று காரியங்களை நான் தவிர்க்கத்தக்கதாக நம்முடைய பரலோகப் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்தேன்.**

13. **கூட்டங்களில் ஒருபோதும் பணத்திற்காக பிச்சையெடுக்க மாட்டேன் என்று தேவனிடம் நான் வாக்களித்தேன்.** அது மட்டுமல்ல, **காணிக்கை தட்டை ஜனங்கள் மத்தியில் அனுப்பி (இத்தகைய காணிக்கையின் மூலம் பல ஆயிர டாலர்கள் கிடைக்கும் என்று நான் அறிந்திருந்தேன்) கூட்டங்களுக்குத் தேவையான பண உதவியை நான் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர் என்னைக் கைவிடுவாரென்றால், நான் ஊழியத்தை விட்டு விட்டு**


**என் வீட்டிற்குத் திரும்பி விடுவேன் என்றும் கர்த்தரோடு ஒரு உடன்படிக்கை செய் திருந்தேன்.**


14. இந்தக் காரியத்தில், யாரையும் எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் என் பணத் தேவையை அவர் அற்புத விதமாக சந்தித்தார். ஜனங்கள் பணம் தரத் தக்கதாக சற்று அவர்களை நிர்பந்திக்க நான் அனுமதிக்காததினால் கூட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யும் மூன்று அல்லது நான்கு நிர்வாகிகள் தங்கள் வேலையையும் இழந்து விட்டனர். **இத்தகைய காரியத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது.**

*செய்தி:* **உள்திரை,** ஜனவரி 21, 1956, ஜெபர்சன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★

~ 5 ~












~ 8 ~










ஒரு ஸ்திரீயை இச்சையோடே பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரஞ் செய்தாயிற்று



DANGER

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

மத்தேயு 5:28

**28. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று.**

---

செய்தி:

யேகோவா யீரே #1 - 62-0705

Grass Valley, California, USA

---

50. அண்மையில் நான் ஹாலிவுட்டில் இல்லை, லாஸ் ஏஞ்சலில் இருந்தேன்.

அங்கு சகோ. ஆர்கன்பிரைட் வருவதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன்.

அங்கு ஒரு பெண் வந்தாள். அவளைக் கண்ட போது நான் தள்ளாடி விழப்போனேன், நான் அவளை உற்றுப் பார்த்தேன்.

"நான் ஒரு மிஷனரி. நான் 'பிளேக்' வியாதியை கண்டிருக்கிறேன், நான் தொழு நோயை கண்டிருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட ஒன்றை நான் கண்டதில்லை" என்று எண்ணினேன்.

அவள் ’வாட்டர் ஹெட்’ சிகை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

உங்களுக்குத் தெரியுமல்லவா, நீங்கள் ’வாட்டர் ஹெட்’ என்று அழைப்பது முதல் சீமாட்டி, ஆம் யேசேபலைப் போன்று, அது போல்.

அவள் ஊதா, பச்சை வர்ணம் தீட்டியிருந்தாள். அவள் காண்பதற்கு அழகான பெண்ணாக இருந்திருப்பாள், ஆனால் அவள் தீட்டியிருந்த வர்ணம், அவளை ஆப்பிரிக்கப் பழங்குடி பெண் போல் தோற்றமளிக்கச் செய்தது.

நான் அவளிடம் நடந்து சென்று அவளுக்காக ஜெபம் செய்யப்போனேன்.

நான், ”பெண்ணே, உனக்கு ஆட்சேபனை இல்லையென்றால், நான் வியாதியஸ்தருக்காக ஜெபிப்பவன். இப்படிப்பட்ட ஒன்றை நான் இதுவரை கண்டதில்லை. அது என்னவென்று என்னிடம் சொல்” என்று அவளைக் கேட்கலாமென்று எண்ணினேன்.

ஆனால் அந்த சமயத்தில் வேறொருவள் அவளிடம் வந்து பேசினாள். அவளும் அதே விதமாக காணப்பட்டாள். ஓ என்னே!.

ஓ, நீங்கள், ”அது பிரஸ்பிடேரியன்” என்கிறீர்கள். பெந்தெகொஸ்தேயினரும் கூட. நிச்சயமாக.



51. “ஒரு ஸ்திரீ தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வது கனவீனமான செயல் என்று வேதம் கூறுகின்றது.

அவள் அப்படி செய்தால் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். அவள் தூதனை, வெளிச்சத்தின் தூதனை (The angel of Light) கனவீனப்படுத்துகிறாள். ஏழு சபை காலங்களின் தூதர்கள், வெளிச்சத்தைக் கொண்டு வருபவர். வார்த்தையில் நிலைநிற்பவர். கனவீனமான செயல்...

அவள் தலையில் மயிரை வைத்திருக்க வேண்டும். என்னே, அப்படிப்பட்ட செயல் அவர்கள் தலைமயிரைக் கத்தரிப்பது தவறென்று முன்பு கருதப்பட்டது.

முதலாம் பெந்தெகொஸ்தேயின் காலத்தில் அப்படி செய்தால் அது தவறாகும்.


என்ன நடந்தது? நீங்கள் நன்றாக ஓடினீர்களே, என்ன நடந்தது? சில பெந்தெகொஸ்தே பெண்கள் உடுத்தும் உடைகள் மிகவும் இறுக்கமாக, உள்ளேயுள்ளதை மறைக்க மேலேயுள்ள தோலைப் போன்றுள்ளது.

அவர்கள் இப்படி உடுத்தி வெளியே சென்று... அது உண்மை! நான் இதை நகைச்சுவைக்காக கூறவில்லை. இங்கு

நகைச்சுவைக்கு இடமில்லை. இது பிரசங்க பீடம்.

நான் அவர்கள் எப்படி உடுத்துகின்றனர் என்பதை ஒரு இரவு கூறினபோது, சில பெண்கள் என்னிடம், ”நான் குட்டை கால் சட்டை எடுப்பதில்லை, நான் நீளமான கால் சட்டையை தான் உடுத்துகிறேன்” என்றனர்.

நான், “அது அதைவிட மோசமானது. புருஷரின் உடைகளைத் தரிக்கும் ஸ்திரீ தேவனுடைய பார்வைக்கு அருவருப்பானவள் என்று தேவன் கூறியுள்ளார்” என்றேன். (உபா – 22:5) அது உண்மை!



அவ்வாறு உடுத்திக்கொண்டு வெளியே செல்லும் வாலிப ஸ்திரீயே, உன்னிடம் ஒன்றை நான் கூறட்டும். நியாயத்தீர்ப்பின் நாளில் விபச்சாரம் செய்த குற்றத்துக்காக நீ பதில் சொல்லியாக வேண்டும். நீ,

**”நான் லீலிப் புஷ்பத்தைப் போல் தூய்மையானவள்”, எனலாம்.**

52. ஆம், ஆனால் இயேசு, ”ஒரு ஸ்திரீயை இச்சையோடே பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரஞ் செய்தாயிற்று” என்று கூறியுள்ளார். (மத் 5:28)

**நீ அந்த செயலில் ஈடுபடாமல் இருந்திருக்கலாம்.** ”தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் அவனை ஏற்கனவே கொலை செய்து விட்டான்”. (மத். 5:22)

**பாருங்கள், அதை நீங்கள் செய்தாலே போதும்.**


பாவி ஒருவன் நீங்கள் உடுத்தியுள்ள விதத்தை பின்னால் தள்ளிக் கொண்டும் முன்னால் உள்ளே சென்றும், அப்படிப்பட்ட உடையை உடுத்திக் கொண்டு நீங்கள் வெளியே செல்லும் போது – கவனியுங்கள், இது தாமஷ் அல்ல. இது சுவிசேஷம்!

நீங்கள் அப்படி செய்யும் போது, பாவி ஒருவன் உங்களைக் காண்பானானால்...

யாராகிலும் ஒரு பாவி உங்களைக் கண்டு இச்சித்தால், நியாயத்தீர்ப்பு நாளில் விபச்சாரம் செய்த குற்றத்துக்காக அவன் பதில் கூறும் போது, அதற்கு

காரணமாயிருந்தது யார்? நீங்கள் தான்.

அந்த விதமாக உங்களைக் காண்பித்த காரணத்தால் நீங்கள் அதற்கு பதில் சொல்லியாக வேண்டும்.




53. நீங்கள் “அவர்கள் வேறு விதமான உடைகளைத் தயாரிப்பதில்லை” எனலாம்.

ஆனால் அவர்கள் தையல் மெஷின்கள் தயாரிக்கின்றனர், இப்பொழுதும் துணிகளை விற்கின்றனர். எனவே சாக்கு போக்குக்கு இடமேயில்லை!

நீங்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகிவிட்டதால் அப்படி செய்கிறீர்கள்.

இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய உபதேசமல்ல, இது கடினமானது.



புகழ் வாய்ந்த போதகர் ஒருவர் அன்றொரு நாள் என்னிடம் வந்து, அவர் கைகளை என் மேல் வைத்து, “என் கைகளை உம்மேல் வைத்து பொல்லாத ஆவியைத் துரத்தப் போகின்றேன்,” என்றார். நான், ”என்ன?”, என்றேன். அவர், “நீங்கள் பெண்களைக் குறித்து இழிவாக பேசுகிறீர்களே? ஜனங்கள் உங்களை தீர்க்கதரிசி என்று

கருதுகின்றனர் என்றார். ”நான் தீர்க்கதரிசியல்ல” என்று பதிலளித்தேன். அவர், ”சகோ. பிரன்ஹாமே, அவர்கள் அப்படி கருதுகின்றனர். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுவது எப்படியென்று நீங்கள் பெண்களுக்கு கற்பித்துக் கொடுப்பதற்கு பதிலாக, அவர்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வதைக் குறித்தும், இன்னும் அது போன்ற மற்றவைகளைக் குறித்தும் சும்மா சொல்லிக் கொண்டிருக்கிறீரே. அவர்கள் அதற்கு செவி கொடுக்க மாட்டார்கள்” என்றார். ”எனக்குத் தெரியும்” என்றேன். அவர்,


”அவர்களுக்கு இதை காட்டிலும் மேலான காரியங்களை நீர் ஏன் போதிக்கக் கூடாது?” என்றார். நான், “அவர்களுக்கு மொழியின் முதலெழுத்துக்களே தெரியாமல் இருக்கும் போது,- சாதாரண நாணயமே என்னவென்று அறியாமலிருக்கும் போது - அவர்களுக்கு அல்ஜீப்ரா போன்ற கணிதத்தை எப்படி என்னால் கற்பிக்க முடியும்?” என்று கேட்டேன்.

54. உங்கள் ஸ்திரீகள் அப்படி நடந்துகொள்ள அனுமதிக்கும் மனிதரே, நீங்கள் கிறிஸ்தவர்கள் என்பதைக் குறித்து எனக்கு மதிப்பு இல்லை. ஆபிரகாமின் சந்ததியா

இது! ஆமென்! இதை இத்துடன் விட்டுவிடுவது நல்லது. இல்லையென்றால் நீங்கள் எல்லொரும் எழுந்து வீட்டுக்குச் செல்லும்படி நான் செய்து விடுவேன். சரி. இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் மேலே ஒன்றைக் காணத் தவறிவிடப் போகின்றீர்கள். "அதனால் ஒரு வித்தியாசமுமில்லை" என்று நீங்கள் கூறலாம். ஆனால், பவுலுக்கு அது வித்தியாசத்தை உண்டு பண்ணினது. ஏதேன் தோட்டத்தில் அது தேவனுக்கு வித்தியாசத்தை உண்டு பண்ணினது. பெண்களுக்கு நீண்ட தலைமயிர் இருக்கவேண்டுமென்று வேதம்

கூறுகின்றது. அதுவில்லாமல் நீங்கள் எந்நிலையில் இருக்கிறீர்கள்?" அதனால் ஒரு வித்தியாசமுமில்லை" என்று நீங்கள் கூறலாம். ஆனால் வித்தியாசம் உண்டு, என்று வேதம் கூறுகின்றது, பிசாசு உங்களிடம் விவாதித்து "அது நவீனமானது, அதனால் பாதகமில்லை" என்று கூற அனுமதியாதேயுங்கள். அதனால் பாதகமுண்டு. நீங்கள் "இதை நான் முன்பு அறிந்திருக்கவில்லை" எனலாம். இப்பொழுது அதை அறிந்து கொண்டீர்கள். பாருங்கள்? நீங்கள் ஆராய்ந்து பார்த்து அது சரியாவென்று அறிந்து


கொள்ளுங்கள், இதை இத்துடன் விட்டுவிடுகிறேன், பாருங்கள். சரி.



55. ஆதியாகமம்:13, நவீனம், உ, ஊ! குமாரன் முன்பிருந்த இடத்துக்கு செல்லுதல், இப்பொழுதுள்ள இடத்துக்கு அல்ல. லோத்தின் மனைவி எவ்வாறு சமுதாயத்தில் நுழைந்தாள் என்பதை கற்பனை செய்து பார்க்கிறேன். நாமும் கூட

அப்படித்தான் சமுதாயத்தில் நுழைந்துவிட்டோம். பெந்தெகொஸ்தேயினராகிய நாம் அப்படித்தான் நுழைந்துவிட்டோம். நாம் இங்கு ஒரு சிறு ஸ்தாபனம் ஏற்படுத்திக் கொண்டு, ஒன்றுக்கு விரோதமாய் மற்றொன்று செயல்பட்டு, அவர்கள்... நீங்கள் எதையுமே ஏற்றுக் கொண்டீர்கள். அது முற்றிலும் உண்மை.

என் வீட்டில் தொலைக்காட்சி பெட்டி
வைத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை.
இல்லை. ஐயா. அது என் வீட்டில் இருப்பது
எனக்குப் பிரியமில்லை. அதை
துப்பாக்கியால் சுட்டு உடைத்து விடுவேன்.
அந்த பொல்லாத காரியத்தோடு யாதொரு
தொடர்பும் கொள்ள எனக்குப்
பிரியமில்லை. ஆம், ஐயா




**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

❖ வீட்டிலிருந்து கொண்டு தொலைக்காட்சி பார்க்கும்படியான காரியத்தில் அது கண்டனம் செய்யவில்லையா?

❖ தேவனை நேசிப்பதைக் காட்டிலும் தொலைக்காட்சிகளை நேசிப்பவர்கள்

❖ ஜெப ஆராதனையில் பங்கு கொள்வதற்கு பதிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிறார்கள்

❖ தேவனுடைய வார்த்தையில் போதுமான அக்கறையில்லை

❖ பழைய ஆதாமின் சுபாவம்

❖ தொலைக்காட்சியிலிருந்து தொலைகாட்சிக்கு அலைந்து திரிகிறார்கள்

❖ பிசாசு திரைப்படக் காட்சிகளை நேராக வீடுகளுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டான்

❖ அவள் தொலைக்காட்சி போன்றவைகளினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டாள்

❖ உங்களுடைய கணவராகிய கிறிஸ்துவுக்கு விரோதமாக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்

❖ பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்ய தூண்டும் தொலைக்காட்சி

- ❖ தொலைக்காட்சியில் மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகள் - இயேசு கிறிஸ்துவுக்கு இழிவைக் கொண்டு வருகிறது
- ❖ தொலைக்காட்சி உலகத்துக்கே ஒரு சாபமா? – நான் இணங்குகிறேன்
- ❖ அழுகிப்போன அருவருப்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - சுவற்றின் மேலுள்ள கையெழுத்து
- ❖ மனநிலை கோளாறை உண்டாக்கும் தொலைக்காட்சி பெட்டியை உங்கள் துப்பாக்கியை உபயோகித்து நொறுக்குவது நலம்
- ❖ தொலைக்காட்சி பெட்டியை உங்கள் வீட்டினின்று அப்புறப்படுத்தி தூர எறியுங்கள்
- ❖ நான் தொலைக்காட்சிக்கு விரோதமானவன்
- ❖ தொலைகாட்சி பெட்டியை அப்புறப்படுத்தி விட்டு குடும்ப ஜெபத்தை மறுபடியும் தொடங்குங்கள்
- ❖ அசுத்தமான தொலைக்காட்சிகளிலிருந்து விலகியிருங்கள்
- ❖ வேதத்திலுள்ள கதைகளை (பிள்ளைகளுக்கு) கூறுவதற்குப் பதிலாக பிள்ளைகளைத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் உட்காரச் செய்கின்றனர்



## வீட்டிலிருந்து கொண்டு தொலைக்காட்சி பார்க்கும்படியான காரியத்தில் அது கண்டனம் செய்யவில்லையா?

பின்பு உங்களுக்கு தலைகனம் வருகிறது. பெரிய எண்ணங்கள் வருகிறது, ஏன்? நான் வீட்டிலிருந்து கொண்டு தொலைக்காட்சி பார்க்கும்படியான காரியத்தில் அது என்னை கண்டனம் செய்யவில்லை. நண்பர்களோடு புகைபிடிக்க அது என்னை கண்டனம் செய்யவில்லை அல்லது அவ்வப்போது குடிக்க அது என்னை கண்டனம் செய்யவில்லை. நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்று உங்கள் கனிகள் சொல்லும்.

**ஐக்கியத்தின் ஒருமைப்பாடு,** *58-0128*



## தேவனை நேசிப்பதைக் காட்டிலும் தொலைக்காட்சிகளை நேசிப்பவர்கள்

சபை என்ன செய்தது? சரியாக துரிதமாக அவரை சபை அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கிப்போட்டது. “என் நாமத்தினால் நீங்கள் ஜெப ஆலயங்களுக்கு புறம்பாக்கப்படுவீர்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்”.

அவர்கள் அகந்தையுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாகவும் இருப்பார்களென்று வேதம் சொல்லுகிறது. எப்பொழுது? கடைசி நாட்களில், தேவனை நேசிப்பதைக் காட்டிலும், தொலைக்காட்சிகளையும், சிற்றின்பங்களையும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும் இருப்பார்கள், “இப்பொழுது நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் அந்த கூட்டங்களுக்கு போகாதீர்கள்.

ஏனென்றால் அவைகளில் ஒன்றுமில்லை.'' அவதூறு செய்கிறவர்கள், வேதம் அவ்விதமாக சொல்லுகிறது. "தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள்''.

**ஐக்கியத்தின் ஒருமைப்பாடு** *58-0128*



## ஜெப ஆராதனையில் பங்கு கொள்வதற்கு பதிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிறார்கள்

"II தீமோத்தேயு 3-ஆம் அதிகாரத்தில் கடைசி காலத்தில் உள்ள சபையைக் குறித்து "துணிகரமுள்ளவர்களாயும் இறுமாப்புள்ளவர்களாயும் தேவ பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும் இருப்பார்கள்'' என்று அவர் உரைத்திருக்கிறார். சபை உலகத்தை எடுத்துக் கொள்ளுங்கள்,

“தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராய் இருக்கிறார்கள்,” புதன்கிழமை இரவு ஜெப ஆராதனையில் பங்கு கொள்வதற்கு பதிலாக வீட்டிலேயே தங்கி தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் காண்கிறார்கள்.

“அது பாப்டிஸ்ட் தான்” என்று நீங்கள் கூறலாம்.

அது பெந்தேகோஸ்தேயினர்! நிச்சயமாக! ஆம் ஐயா. ஓ! “துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், சுகபோகப் பிரியர்களாயும்;” அவர்கள் மூக்கிற்கு கீழாக வார்த்தை வைத்துப் பாருங்கள், அதை அவர்கள் காணவே மாட்டார்கள். அஹ்—அஹ். “தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும்”, தங்கள் மயிரைக் கத்தரிக்கக்கூடாது என்று ஸ்திரிகளிடம் கூறிப்பாருங்கள், எப்படியாயினும் கத்தரித்து விடுவார்கள். அஹ்—அஹ். “தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், இணங்காதவர்களாகவும், அவதூறு செய்கிறவர்களாகவும்,

இச்சையடக்கமில்லாதவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும் இருப்பார்கள்.”

**சாயங்கால செய்தியாளன்**

*63-0116*



## 4. தேவனுடைய வார்த்தையில் போதுமான அக்கறையில்லை

நல்லது, நம்முடைய பெந்தெகோஸ்தே ஸ்திரீகளுக்கு என்ன நேர்ந்தது?

அதிகமான தொலைகாட்சி (TV) நிகழ்ச்சிகளை பார்த்து விட்டீர்கள்! நீங்கள் உலகத்தின் காரியங்களை மிகவுமாக கண்டுவிட்டீர்கள்.

ஆதலால் தேவனுடைய வார்த்தையில் உங்களுக்கு போதுமான அக்கறை உண்டாவதில்லை. இப்பொழுது, அதைத்தான்

வேதாகமம் கூறுகின்றது. அது நானல்ல, இப்பொழுது, அது தான் வேதாகமம்.

**சாயங்கால செய்தியாளன்** *63-0116*



## பழைய ஆதாமின் சுபாவம்

ஆனால் சபையே, உனக்கு என்ன நேர்ந்தது?

நீ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமாகக் கண்டு, உலகத்தின் காரியங்களை அதிகமாகக் கொண்டிருக்கிறாய்.

உன்னுடைய பழைய ஆதாமின் சுபாவம் மிதந்து சென்று அதற்குள் நுழைந்து, மற்றவர்களைப் போல் நடந்து கொள்வதென்பது மிகவும் எளிது.

**வழிநடத்தும் தன்மை** *65-1207*



## தொலைக்காட்சியிலிருந்து தொலைகாட்சிக்கு அலைந்து திரிகிறார்கள்

உண்மையான முன்குறிக்கப்பட்ட விசுவாசிகள் வார்த்தையில் நிலைத்திருப்பார்கள். ஏனெனில் அவர்கள் அந்த வார்த்தையின் ஒரு பாகமாய் இருக்கின்றனர்.

ஓ, அலைந்து திரியும் நட்சத்திரங்களே, எவ்வளவு காலம் நீங்கள் அலைந்து திரிவீர்கள்?

மெதோடிஸ்டுகளே, பாப்டிஸ்டுகளே, பிரஸ்பிடேரியன்களே, வெளியில் உள்ளவர்களே, நீங்கள் யாராயிருந்தாலும்; சபைக்கு சபை, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடம், தொலைக்காட்சியிலிருந்து தொலைகாட்சிக்கு, உலகத்திலிருந்து

உலகத்துக்கு அலைந்து திரியும் நட்சத்திரங்களே, நீங்கள் ஏன் வரக்கூடாது?

அவர் உங்களுடன் ஐக்கியங்கொள்ள வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். அவர் உங்களுக்காக ஆவல் கொண்டிருக்கிறார். உங்கள் மனம் புதிதாகிறதினாலே அவர் உங்களை, சபைக்கு அல்லது ஸ்தாபனத்துக்கு அல்ல, அவருடைய வார்த்தைக்கு மறுரூபப்படுத்த விரும்புகிறார்.

அந்த வாஞ்சை உங்களில் இருக்குமானால், நீங்கள் வார்த்தையின் ஒரு பாகமாக இருக்கிறீர்கள்.

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

மத்.5:6

**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை** *65-0911*



## பிசாசு திரைப்படக் காட்சிகளை நேராக வீடுகளுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டான்

நம்முடைய தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகிற எல்லா காரியங்களும் தணிக்கை செய்யப்படாத கீழ்த்தரமான நகைச்சுவைகள் அழுகிப்போன ஒழுக்கக் கேடான காட்சிகள்தான். அது எல்லாவற்றிற்குள்ளும் புகுந்து கொண்டிருக்கிறது. ஆகவே மக்கள், அந்த பிசாசு...

ஆதி பெந்தேகொஸ்தே மக்களாகிய நாம் அநேக வருடங்களுக்கு முன் நம்முடைய பிள்ளைகளை திரைப்படத்திற்கு செல்வதற்கு கூட நாம் அனுமதிக்க மாட்டோம்.

ஆனால் இப்பொழுதோ பிசாசு அழகாக நம் வீடுகளுக்குள் கொண்டு வந்து வைத்துவிட்டான்.

நீங்கள் பாருங்கள்? ஆகவே திரைப்படக் காட்சிகளை நேராக வீடுகளுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டான்.

**சாங்கால செய்தியாளன்** *63-0116*



## அவள் தொலைக்காட்சி போன்றவைகளினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டாள்

இன்றைக்கும் அதுதான் நடந்து வருகிறது. அவள் தொலைக்காட்சி, பத்திரிகைகள், ஜனங்கள், தெருக்களில் நடப்பவை போன்றவைகளினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டாள்.

நவீன காலத்து பெண்கள் பத்திரிகைகளில் படங்களைப் பார்க்கின்றனர், தெருக்களில் நடந்து செல்லும் பெண்களைக் காண்கின்றனர். கடைகளில் விற்கப்படும் உடைகளை காண்கின்றனர்.

நரகத்தின் அதிபதியாகிய பிசாசு ஜனங்களின் மத்தியில் வந்து, இவைகளை செய்யும்படி அவர்களை வஞ்சித்து விட்டான்.

ஸ்திரீயானவள் தான் சரி என்று நினைத்துக்கொள்கிறாள். ஆனால் அவள் மரித்துப்போனதை அறியாமலிருக்கிறாள்.

அவள் தேவனை விட்டு தூரம் சென்றுவிட்டாள்.

அது எவ்வளவு தந்திரமுள்ளதென்றும், அவள் எப்படி இவையனைத்தும் இழந்துவிட்டாளென்றும் பார்த்தீர்களா?

**மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு** *65-1125*



## உங்களுடைய கணவராகிய கிறிஸ்துவுக்கு விரோதமாக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்

நீங்கள் உலகத்தோடு வேசித்தனம் செய்திருக்கிறீர்கள்.


நீங்கள் நடனங்களுக்குச் சென்று இசைப்பேழையில் ஆரவார இசைப்புச் சந்த நிகழ்ச்சிக்குச் சென்று, கீழ்த்தரமான இழிவான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உன்னிப்பாக கவனிக்கிறீர்கள், நீங்கள் கிறிஸ்துவை உங்களுடைய கணவன் என்று அழைத்துக் கொண்டே, அவர்பேரில், அவருக்கு எதிராக விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

**கர்த்தருடைய இரண்டாம் வருகை** *57-0417*




## பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்ய தூண்டும் தொலைக்காட்சி

கர்த்தரின் நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது. அப்பொழுது ஜனங்கள் முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களாய் ஆகிவிடுவார்கள். வேதம் அவ்வாறு கூறுகின்றது.



அவர்கள் பயத்தில் கூக்குரலிட்டு அலறுவார்கள் - தங்கள் மனதில் பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்துகொண்டு. வானொலிகளும் தொலைக்காட்சிகளும் அத்தகைய பயங்கரமான காட்சிகளை காண்பிக்கின்றன.

**இதை அறியாமல் இருக்கிறாய்** *65-0815*



## தொலைக்காட்சியில் மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகள் - இயேசு கிறிஸ்துவுக்கு இழிவைக் கொண்டு வருகிறது

அன்றொரு நாள் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைக் காணும்படி என்னை அறைக்கு அழைத்தனர். பில்லி பால் என்று நினைக்கிறேன், அல்லது வேறு யாரோ, தொலைக்காட்சியில் மார்க்க சம்பந்தமான

நிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதாக என்னிடம் கூறினான்.

**எங்களிடத்தில் தொலைகாட்சிக்பெட்டி கிடையாது. என் வீட்டில் என்றைக்குமே ஒன்று இராது. நீங்கள் ஒன்றை வைத்துக்கொள்ள விரும்பினால், அது உங்களைப் பொறுத்தது. அதை வைக்க வேண்டாமென்று தேவன் என்னிடம் கூறினார்.**

இங்கு நாங்கள் வந்தபோது, இந்த இனிமையான, முதிய சகோதரியின் வீட்டை வாடகைக்கு எடுத்தேன். அவர்களுடைய வீட்டில் ஒரு தொலைக்காட்சி பெட்டி இருந்தது. ஏனெனில் தொலைகாட்சி பெட்டியுடனே அவர்களுடைய வீடு வாடகைக்கு கொடுக்கப்பட்டது.

மார்க்க சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் காண நான் பிள்ளைகளை அனுமதிப்பதுண்டு, அவர்கள் என்னை அழைத்து, சுவிசேஷ

பாடல்கள் நிகழ்ச்சி ஒன்று நடப்பதாகக் கூறினர்.

சுவிசேஷப் பாடல்களை பாடுபவர் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அவர்கள் ஒரு கூட்டம் ரிக்கிகளைப் போலவே நடந்து கொண்டனர்.

அவர்கள் நடத்தை, தங்கள் உடலைக் குலுக்குதல், ரிக்கி தலைமயிர் கத்தரிப்பு போன்றவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவுக்கு இழிவைக் கொண்டு வருவதாக அமைந்திருந்தன. அது கேலிக்கூத்தைப் போல் காட்சியளித்தது.

காயீன் அப்படிப்பட்ட ஒருவனாக இருந்தான். அவன் நிச்சயமாக தன் செயல்களில் மதாபிமானம் கொண்டவனாக இருந்தான். ஆனால் அவனுக்குள் தவறான வித்து இருந்தது. பாருங்கள். ஆகவே அது சர்ப்பத்தின் வித்தை தோன்றச்செய்தது. சாத்தான் ஏதேனின் வித்தின் மேல் சர்ப்பமாக சீறினான். அது தான் காயீனைத் தோன்றச்

செய்தது. அவன் தன் விஷத்தை அதன் மேல் பூசினான்.

**மறுரூபப்படுத்தும் வல்லமை** *65-1031*M



## தொலைகாட்சி உலகத்துக்கே ஒரு சாபமா? – நான் இணங்குகிறேன்

இன்றிரவு முதல் கேள்வி:

*சகோ பிரான்ஹாமே, தொலைக்காட்சி உலகத்துக்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

நல்லது, அதை எழுதினவர் யாராயிருப்பினும், நான் உங்களுடன் இணங்குகிறேன், அவர்கள் அதை உலகிற்கு சாபமாக்கிவிட்டனர். அது உலகிற்கு

ஆசீர்வாதமாக இருந்திருக்ககூடும், ஆனால் அவர்களோ அதை சாபமாக்கி விட்டனர்.

என் அருமை மக்களே, அப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் எந்தவகையில் நோக்குகிறீர்கள் என்பதை அது பொறுத்தது. தொலைக்காட்சி சாபமாகக் கருதப்படுமானால், செய்திதாளும் சாபமே, வானொலியும் சாபமே, அநேகமுறை தொலைபேசியும் சாபமாக உள்ளது. பாருங்கள், பாருங்கள், பாருங்கள், பாருங்கள்? நீங்கள் அதை எவ்விதமாக செய்துவிடுகிறீர்கள் என்பதை அனுசரித்து அது உள்ளது.

அன்றிரவு அந்த சகோதரன் கூறினவிதமாக, தொலைக்காட்சியில் இப்பொழுது சுவிஷேச நிகழ்ச்சிகளே இருப்பதில்லை. ஏனெனில் அதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. முழு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒரு எளிய போதகருக்கு தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைத் தர இயலாது. எனவே..... அன்றிரவு சகோதரன் இங்கு கூறினாரென்று நினைக்கிறேன். அல்லது வேறெங்கோ. அவர்,

“உங்கள் வானொலிப்பெட்டியின் மேலுள்ள தூசைத் துடைத்துவிட்டு அதை மூலையிலிருந்து கொண்டு வந்து சுவிசேஷ நிகழ்ச்சிகளைக் கேளுங்கள்” என்றார். அது உண்மை.

ஆனால் அன்பார்ந்த நபரே, நீங்கள் யாராயிருந்தாலும் உங்களுடன் நான் நிச்சயம் இணங்குகிறேன். அது மானிட வர்க்கத்துக்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது.

அரசாங்கத்துக்கு வரிகளாக செல்லவேண்டிய பணத்தை அவர்கள் எடுத்து, சிகரெட்டுகள், விஸ்கி போன்றவைகளை விளம்பரப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளை நடத்தி, அரசாங்க வரிகளிலிருந்து சலுகை பெற்று, அதன் பிறகு அவர்கள் சிறுதொகையைப் பெற, போதகர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்கின்றனர்.

நான் உங்களுடன் இணங்குகிறேன். அது மிகவும் பயங்கரமான ஒன்று... நீங்கள் அதில் காணும் நிகழ்ச்சி என்னவென்பதைப் பொறுத்தது. இந்த கேள்வியைக் கேட்டது

சகோதரன் அல்லது சகோதரி யாராயிருப்பினும் உங்களுக்கு என் நன்றி.

**பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும்** *59-1219*



## 13. அழுகிப்போன அருவருப்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - சுவற்றின் மேலுள்ள கையெழுத்து

தொலைக்காட்சி மோசமாகிக் கொண்டே வந்து, வானொலியிலும் செய்தித்தாள்களிலும் சிகரெட்டுகள், புகையிலைகள், விஸ்கி போன்றவைகளை விளம்பரம் செய்து, அவலட்சணமாக உடுத்தியுள்ள பெண்கள், ஆபாசமான நகைச்சுவை, தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஆபாசமான நகைச்சுவை துணுக்குகளைக் கூறுபவர்கள்; அமெரிக்கா இதற்கு மயங்கிவிட்டது...

நேபுகாத்நேச்சார் ராஜாவின் அரண்மனையில் அன்றிரவு பயங்கர ஜன நெருக்கடி; கேளிக்கை போன்றவை நடந்து கொண்டிருந்தன. அங்கு மது, விருந்து, நடனம், தொலைக்காட்சி நிகழ்ச்சி அக்காலத்தில் இருந்திருக்குமானால், அதுவும் மற்றும் அவர்களுடைய கோமாளிகள் வெளியே வந்தனர்.

அப்பொழுது ஒரு விரல் சுவற்றில் எழுதினது.

**விளங்காத சத்தம்** *60-1218*



**மனநிலை கோளாறை உண்டாக்கும் தொலைக்காட்சி பெட்டியை உங்கள் துப்பாக்கியை உபயோகித்து நொறுக்குவது நலம்**

தன் வீட்டில் தொலைக்காட்சி பெட்டியை வைத்திருக்கும் ஸ்திரீயிடமிருந்து நாங்கள் வாடகைக்கு வாங்குறோம். என் வீட்டில் தொலைக்காட்சி பெட்டி வைத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை. இல்லை. ஐயா. அது என் வீட்டில் இருப்பது எனக்குப் பிரியமில்லை. அதை துப்பாக்கியால் சுட்டு உடைத்து விடுவேன். அந்த பொல்லாத காரியத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ள எனக்குப் பிரியமில்லை. ஆம், ஐயா. ஆனால் அதை...

அரிசோனா நாட்டைச் சேர்ந்தவர்களாகிய உங்களைக் குறித்து இங்கு கூற விரும்புகிறேன். பள்ளிகளைக் குறித்த புள்ளி விவரத்தை அன்றொரு நாள் நீங்கள் கண்டிருப்பீர்கள் இல்லையா?

அரிசோனா பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களில் எண்பது சதவிகிதம் மனநிலை கோளாறினால் அவதியுறுகின்றனர்.

அவர்களில் அறுபத்தேழு சதவிகிதம் தொலைக்காட்சியைக் கண்டதால். அதை குறித்து என்ன சொல்லுகிறீர்கள்?

எனவே உங்கள் துப்பாக்கியை உபயோகித்து அதை நொறுக்குவது நலம்! பாருங்கள்?

பிசாசு அதை உங்கள் மேல் தெளிக்க இடங்கொடுக்காதீர்கள். இல்லை, ஐயா. ஜனங்கள், நான் கூறினது போன்று, நியாயத்தீர்ப்புக்கு வரவேண்டியதில்லை என்பது போல் நடந்து கொள்கின்றனர்.

**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை** *65-0911*



## தொலைக்காட்சி பெட்டியை உங்கள் வீட்டினின்று அப்புறப்படுத்தி தூர எறியுங்கள்

யாரை விசுவாசிக்க வேண்டும்? உங்கள் வீட்டார் இரட்சிக்கப்படுவதற்கென இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்.

அந்த அடையாளத்தை உங்கள் வீட்டாரின் மீது போடுங்கள்.


நீங்கள் செய்ய வேண்டியது என்ன? வீட்டில் காணப்படும் குப்பை (TRASH) அனைத்தையும் அகற்றுங்கள். குட்டை பாவாடையும், அரைக்கால் சட்டையும், சீட்டாட்டத்தையும், சிகரெட்டுகளையும், டெலிவிஷன்களையும், இதுபோன்ற எல்லாவற்றையும் தூர எறியுங்கள்.

ஏனெனில் நீங்கள் அடையாளத்தை போடப்போகின்றீர்கள். ஆம், ஐயா, அவையனைத்தையும் அகற்றுங்கள்.

நடனங்களையும், பார்ட்டிகளையும், ராக் அண்டு ரோல் நடனங்களையும், கீழ்த்தரமான செய்தித்தாள்களையும், உலகின் காரியங்கள் அனைத்தையும் வீட்டினின்று அப்புறப்படுத்தி, உதைத்து தள்ளி விடுங்கள்.

“இந்த இடத்தை நாங்கள் சுத்தமாக்குகிறோம்” என்று கூறுங்கள்.

**அடையாளம்** *63-0901*M



# 16

## நான் தொலைக்காட்சிக்கு விரோதமானவன்

நான் தொலைக்காட்சியை விரும்புவதில்லை.

உங்களுக்கு தெரிந்துள்ளபடி, அதற்கு நான் விரோதம்.

**அறுப்பின் நேரம்** *64–1212*





## தொலைகாட்சி பெட்டியை அப்புறப்படுத்தி விட்டு குடும்ப ஜெபத்தை மறுபடியும் தொடங்குங்கள்

தந்தைமார்களே, தாய்மார்களே உங்கள் வீட்டில் ஜெபத்தை ஏற்படுத்தி, தொலைக்காட்சி பெட்டியை எடுத்துப்போட ஆயத்தமா? மேசையின் மேலுள்ள சீட்டுக்கட்டை தூக்கி எறிய ஆயத்தமா?

உங்கள் பிள்ளைகள் படிக்கும் 'காமிக்ஸ்' புத்தகங்கள், பிசாசு அவர்களுக்கு கொடுக்கப்போகும் அதிர்ச்சிக்கு அவர்களுடைய பிஞ்சு உள்ளங்களை ஆயத்தப்படுத்துகின்றன.

உங்கள் பழைய குடும்ப ஜெபத்தை மறுபடியும் நிலைநாட்ட ஆயத்தமா? அல்லது இப்பொழுதுள்ள உங்கள் வழியில் நீங்கள் தொடர்ந்து செல்ல விரும்புகிறீர்களா?

நீங்கள் தொடர்ந்து செல்ல விரும்பினால், அதை விட்டு வெளியே வரும் நிலையில் நீங்கள் இன்னும் இல்லை.

நீங்கள் சிம்சோனைப்போல், செலுத்த வேண்டிய கிரயத்தைக்கண்டு, ஆயத்தமடைந்து, "கர்த்தாவே, நானும் அவர்களோடு கூட மடியட்டும்" என்று கூற வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

**இன்னும் ஒருவிசை, கர்த்தாவே** *63–0120*E



## அசுத்தமான தொலைக்காட்சிகளிலிருந்து விலகியிருங்கள்

இப்பொழுது, பிசாசு தனது கல்வியை உங்கள் மேல் தெளிக்க இடம் கொடுக்காதீர்கள். வேண்டாம், வேண்டாம். அது உங்களைக்கொன்று போடும்.

“என் தாயார், என் தகப்பனார், என் பாட்டி சேர்ந்திருந்த சபையை நானும் சேர்ந்திருக்கிறேன்” என்பதை பிசாசு உங்கள் மேல் தெளிக்க இடங்கொடுகாதீர்கள்.

வேதம் ஏழு சபைகளைக் குறித்தும் மற்றவைகளைக் குறித்தும் உரைக்கும்போது, அது அனைத்தும் விதைக்குள் சென்று விட்டது என்கிறது. எல்லாமே அழுகி விட்டது. எல்லாமே நொதிக்கிற இரணமாயுள்ளது.

பிசாசு உங்கள் மேல் தெளிக்க இடங்கொடுத்து, "அது உயரிய நெறி. நாங்கள் முன்காலத்தவரைக்காட்டிலும் அதிக கல்வி பயன்றுள்ளோம்" என்று கூறாதீர்கள்.

பிசாசு அதை உங்கள் மேல் போட இடங்கொடுக்காதீர்கள்; அவனுடைய நாகரீகம், கல்வி, விஞ்ஞானம் ஆகிய முழுத் திட்டத்தை உங்களுக்குக் காண்பித்தேன். அவன் அதை சபையில் நுழைத்து விட்டான். அதற்கு செவி கொடுக்காதீர்கள். அந்த அசுத்தமான தொலைக்காட்சிகளிலிருந்தும் மற்றவைகளிலிருந்தும் விலகியிருங்கள்.

**மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை**

*65-0911*




## வேதத்திலுள்ள கதைகளைக் (பிள்ளைகளுக்கு) கூறுவதற்குப் பதிலாக பிள்ளைகளைத் தொலைக்காட்சிப்

## பெட்டிகளுக்கு முன்னால் உட்காரச் செய்கின்றனர்

இவ்விதமாக வேதத்திலுள்ள கதைகளை (பிள்ளைகளுக்கு) கூறுவதற்குப் பதிலாக பிள்ளைகளைத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் உட்காரச் செய்து ஹாலிவுட்டின் திருட்டுகளைக் குறித்து தாய்மார்கள் பிள்ளைகளுக்குக் காட்டுவது எவ்வளவு மிகவும் மோசமான காரியமாயிருக்கிறது?

**தேவன் ஒரு அருளப்பட்ட ஆட்டுக்குட்டியை உடையவராயிருக்கிறார்** *64-0620E*



★★★★★

**அதே பரிசுத்த ஆவியே ஒருகூட்ட ஜனங்களின் மேலும் ஊற்றப்படவும், மற்றவர்களை ஆசீர்வதிப்பது போன்றே ஒரு மாய்மாலக்காரனையும் ஆசீர்வதிக்க முடியும்**

நானோ அவரைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் பாருங்கள். முடிவிலே நான் அவருடைய ஆவியைக் கண்டறிந்தேன். அது இன்னொரு மனிதனாயிருந்தது. நான் எப்பொழுதாவது ஒரு கீழ்த்தரமான மாய்மாலக்காரனோடு பேசியிருப்பேனேயால் இவன் அவர்களில் ஒருவனாவான். அவனுடைய மனைவி ஒரு கறுத்த தலைமுடியை கொண்ட ஸ்திரீயாக இருந்தாள். ஆனால் அவனோ பழுப்பு நிற தலை முடியைக் கொண்ட ஒரு ஸ்திரீயுடன் ஜீவித்துக்கொண்டு, அவள் மூலம் பிறந்த இரண்டு பிள்ளைகளை உடையவனாயிருந்தான். அவன் குடிப்பதும், சபிப்பதும், மதுபான கடைக்கு ஓடுவது, மற்றெல்லா காரியங்களையும் செய்துகொண்டு, அதே சமயத்தில் அங்கே அந்நிய பாஷையில் பேசிக்கொண்டும், தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டுமிருந்தான்.

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

86. எனவே இந்த காரியங்களை நீங்கள் என்னுடைய சுயசரிதையில் கேட்டிருக்கிறீர்கள். ஆகையால் நான் இங்கே நிறுத்திவிட்டு, இதற்கு முன்பு ஒருபோதும் கூறாத ஏதோ காரியத்தை கூறவுள்ளேன். முதலாவது நான் உங்களை கேட்க விரும்புவது ........ நான் அதை அப்படியே விட்டுவிட்டு தொடருகிறேன். என்னுடைய ஜீவியத்தில் நான் இதை பொது ஜனங்களுக்கு முன்பாக இதற்கு முன்பு கூறினதே கிடையாது. நீங்கள் என்னை நேசிப்பீர்கள் என்றும், நான் இதை கூறுவதற்கு முன்பாக நீங்கள் என்னை நேசித்தவிதமாக இதை கூறின பின்பும் நேசிப்பீர்கள் என்றும் வாக்களிப்பீர்களேயானால் உங்கள் கரத்தை உயர்த்துங்கள். சரி. அது உங்களுடைய வாக்குறுதியாயிருக்கிறபடியால், நான் அதை உங்களிடத்தில் தொடர்ந்து கூறப்போகிறேன்.

87. அன்றிரவு கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கையில், அவர்கள் தங்கள் கரங்களைத்தட்டி பாடல்களைப் பாடினர். அவர்கள், "நான், அது ........" என்று பாடுவார்கள். அந்த சிறிய பாடல், "அது இரத்தமாயிருந்தது என்பதை நான் அறிவேன். அது இரத்தமாயிருந்தது என்பதை நான் அறிவேன்" என்பதாகும். அவர்கள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டும், 'சத்தமிட்டுக்

கொண்டும் கர்த்தரை துதித்துக் கொண்டும் இருப்பார்கள். எனவே நான், “அது எனக்கு மிக நல்ல பயபக்தியை ஏற்படுத்துகிறதே” என்றே எண்ணினேன். பின்னர் நான் ......... துவங்கி ........

88. அவர்கள் அப்போ. 2:4, அப். 2:38; அப். 10:49 முதலானவைகளை எப்போதும் குறிப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது நான், “அது வேத வாக்கியமாயிற்றே!. நான் அதை இதற்கு முன் அந்த விதாமாய் கண்டதே இல்லையே” என்றே எண்ணினேன். ஆனால், ஓ, என்னுடைய இருதயம் எரிந்து கொண்டிருந்தது. ஆக நான், “இது அற்புதமாயிருக்கிறதே!” என்று எண்ணினேன். பின்னர் நான் முதலாவதாக அவர்களை சந்தித்தபோது அவர்கள் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள் என்றே எண்ணினேன். ஓ, என்னே, ஆனால் இப்பொழுதோ நான், “அவர்கள் ஒரு கூட்ட தூதர்கள்” என்று எண்ணினேன். பாருங்கள். நான் உடனடியாக என்னுடைய கருத்தை மாற்றிக்கொண்டேன்.

89. எனவே அடுத்த நாள் காலையில் இந்த கூட்டங்களை நடத்தும்படியான மகத்தான தருணத்தை கர்த்தர் எனக்கு கொடுத்திருந்தார். அப்பொழுது நான், “ஓ, என்னே, நானும் இந்த கூட்ட ஜனங்களோடு சேர்ந்து கொள்ளலாம்.

அவர்கள் வழக்கமாக சத்தமிடும் மெத்தோடிஸ்டுகள் என்று அழைக்கும் வகையினராய் இருக்க வேண்டும்" என்றே எண்ணிக்கொண்டேன். பின்னர் அப்படியே தொடர்ந்து சற்றுதூரம் சென்று, ஒருக்கால் அதுவாக இது இருக்கலாம் என்று நான் எண்ணினேன். எனவே நான், "நல்லது, நான் ....... நான் நிச்சயமாகவே அதை விரும்புகிறேன். ஓ, அவர்களிடத்தில் நான் விரும்புகிற ஏதோ காரியம் இருக்கின்றது. அவர்கள் தாழ்மையாயும், இனிமையாயும் இருக்கிறார்களே" என்று எண்ணினேன்.

90. ஆனால் அந்நிய பாஷைகளில் பேசுவது மட்டுமே நான் புரிந்து கொள்ளமுடியாத ஒரு காரியமாக இருந்தது, அது என்னை இழுத்தது. எனவே நான் ...... அங்கே ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். இன்னொரு மனிதன் இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான். அவர்கள் குழுத் தலைவர்களாயிருந்தனர். இங்கே இருப்பவர் எழும்பி அந்நிய பாஷையில் பேசுவார், அப்பொழுது அங்கே இருப்பவர் அதற்கு வியாக்கியானம் அளித்து, பின்னர் கூட்டங்களைக் குறித்த காரியங்களைக் கூறுவார். நானோ, "என்னே, வ்யூ, நான் அதை வாசிக்க வேண்டும்"

என்று எண்ணினேன். ஆக உடனே அது அப்படியே மாறுதலாக இவன் மேல் விழுந்து பின்னர் திரும்பவும் அவன் மேல் வரும். அப்பொழுது ஒவ்வொருவரும் அந்நிய பாஷையிலே பேசி வியாக்கியானம் அளிப்பார்கள். சபையிலிருக்கிற மற்றவர்களும் அந்நிய பாஷையில் பேசுவார்கள். ஆனாலும் இவர்கள் இருவருக்கும் வியாக்கியானம் வருவதுபோன்று அது தென்படவில்லை. அவர்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து உட்காருவதை நான் கண்டு, "ஓ, என்னே, அவர்கள் தூதர்களாய் இருக்க வேண்டும்" என்றே எண்ணினேன். எனவே அங்கே பின்னாக நான் உட்கார்ந்திருக்கையில் .......

91. அது என்னவாக இருந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அது என் மேலும் வரும். அதாவது நான் அதை அறிய வேண்டுமென்று தேவன் விரும்புவாரானால், அப்பொழுது அந்த காரியங்களை அறிந்து கொள்ளும்படியாக நான் ஒரு வழியை உடையவனாயிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த காரணத்தினால் தான் நான் இதைக் குறித்து மூச்சு விடுகிறதில்லை. மேலும் இதை பொது ஜனத்திற்கு முன்பாகவும் கூறினதே கிடையாது. **நான் உண்மையாகவே**

**ஏதோ ஒரு காரியத்தை அறிய வேண்டுமானால், அப்பொழுது கர்த்தர் வழக்கமாக அந்த காரியங்களைக் குறித்து என்னிடம் கூறிவிடுவார்.** அதற்காகவே அந்த வரம் இருக்கிறது. உங்களுக்குப் புரிகின்றதா? எனவே அதை தூக்கி ஜனங்கள் முன்பாக எறிய முடியாது, ஏனெனில் அது பன்றிக்கு முன்பாக உங்களுடைய முத்துக்களை எறிவது போலாகும். அது ஒரு புனிதமான, பரிசுத்தமான காரியமாக இருக்கிறது. ஆயினும் அதைச் செய்ய நீங்கள் விரும்புகிறதில்லை. எனவே, தேவன் என்னை அதற்காக உத்தரவாதமுடையவனாக்குவார். சகோதரர்களிடத்தில் பேசுதல் போன்ற காரியங்களைப் போன்றே, ஒரு சகோதரனைக் குறித்த பொல்லாங்கான ஏதோ காரியத்தை நான் அறிய விரும்பமாட்டேன்.

92. ஒரு சமயம் ஒரு மனிதனுடன் மேஜையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவன் தன்னுடைய கரத்தை என் மேல் போட்டிருந்தான். அப்பொழுது அவன், "சகோதரன் பிரான்ஹாம் நான் உங்களை நேசிக்கிறேன்" என்றான். ஏதோ ஒரு காரியம் அசைந்து கொண்டிருக்கிறது போன்றதான உணர்வெனக்கிருந்தது. அப்பொழுது நான் அவரை நோக்கிப் பார்த்தேன். அவன் அதை

என்னிடத்தில் கூறியிருக்க முடியாது. அவன் அதைச் செய்யவில்லையென்று நான் அறிந்துகொண்டேன், பாருங்கள், ஏனென்றால் அங்கேதான் அந்த காரியம் இருந்தது. **அங்கு ஒரு மாய்மாலக்காரன் இருந்தான் என்றால் அது சரியாக இவனே.** ஆனால் பாருங்கள், அவனோ அங்கே என்மேல் தன்னுடைய கரத்தை போட்டுக்கொண்டிருந்தான்.

93. நான் சரி என்று கூறி கடந்து சென்றுவிட்டேன். நான் அதை அறிந்து கொள்ள விரும்பவில்லை. என்னுடைய சகோதரன் என்ற முறையில், நான் அறிந்த முறையில் நான் அவனை அறிந்திருந்தேன். அது அந்த விதமாகவே போகட்டும். எஞ்சியுள்ளதை தேவன் செய்யட்டும். புரிகின்றதா? இந்த காரியங்களையெல்லாம் நான் அறிந்து கொள்ள விரும்பவில்லை.

94. இந்த காரியங்களின் பேரில் அநேக முறைகள், இங்கே இந்த சபைக்குள்ளாக இல்லை. நான் அறையில் உட்கார்ந்து கொண்டிருப்பேன். நான் உணவகத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பேன். அப்பொழுது சம்பவிக்கப்போகின்ற காரியங்களை பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் கூறுவார். அது உண்மை என்பதை இங்குள்ள ஜனங்கள் அறிவர். நான் வீட்டில் உட்கார்ந்து

கொண்டிருப்பேன், உதாரணமாக, “இப்பொழுது ஜாக்கிரதையாயிரு. கொஞ்சம் கழித்து ஒரு கார் வரப்போகின்றது. இன்னின்ன நபர் அதிலே இருப்பான். அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று கர்த்தர் கூறியுள்ளபடியால் அவர்களை இங்கே உள்ளே கொண்டு வாருங்கள்” என்பேன். மேலும் அவர், “நாங்கள் வீதிக்குச் செல்லும் போது அங்கே இன்னின்ன காரியம் சம்பவிக்கும். அங்கே வீதியின் சந்திப்பில் கவனி, அங்கே நீ சற்றேறக்குறைய மோதிவிடப் போகின்றாய்” என்று கூறுவார். அந்தவிதமாக அது இருக்கவில்லையா? என்று பாருங்கள். அது ஒவ்வொரு நேரத்திலும் அப்படியே பரிபூரணமாக இருக்கிறதே! ஆயினும் நீங்கள் உங்களை அதன் பேரில் அதிகமாய் சார்ந்திருக்கும்படி செய்து கொள்ள வேண்டாம். ஏனென்றால் நீங்கள்... அது.... நீங்கள் அதை உபயோகிக்கலாம். அது ஒரு தேவனுடைய வரம். ஆனால் அதனைக் கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையும், நீங்கள் கவனிக்க வேண்டும். தேவன் உன்னை அதற்காக பதில் கூறும்படி செய்வார்.

95. மோசேயைப் பாருங்கள். மோசே தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதனாயிருந்தான். நீங்கள் அதை

விசுவாசிக்கிறீர்களா? முன்குறிக்கப்பட்டவன், முன்நியமிக்கப்பட்டவன், ஒரு தீர்க்கதரிசியாக ஆக்கப்பட்டவனாயிற்றே! தேவன் அவனை அங்கே வெளியே அனுப்பி, அந்த கன்மலை அடிக்கப்பட்ட பின்னர், "அதனண்டைப் போய் பேசு" என்று கூறினார். மேலும் "போய் அதனிடத்தில் பேசு, அது தன்னுடைய தண்ணீரை அளிக்கும்" என்றார்.

96. ஆனால் மோசேயோ கோபமடைந்து அதனிடத்திற்கு ஓடிப் போய் அந்த கன்மலையை அடித்தான். தண்ணீர் வரவில்லை. அதை மீண்டுமாக அடித்து, "கலகக்காரர்களே உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமா?" என்றான்.

97. தேவன் என்ன செய்தார் என்று பார்த்தீர்களா? தண்ணீர் வந்தது. ஆனால், "மோசே இங்கே மேலே ஏறிவா" என்றார். அதுதான் அதன் முடிவாய் இருந்தது. பாருங்கள் இந்த காரியங் களை நீங்கள் கவனிக்க வேண்டும். எனவே நீங்கள் ........ தெய்வீக வரங்களோடு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

98. **ஒரு நல்ல பிரசங்கியைப் போன்றோ, ஒரு நல்ல வல்லமையான பிரசங்கியாரைப்**

**போன்றோ, வெளியே சென்று காணிக்கைகளையும், பணத்தையும் எடுத்துக் கொள்ளும்படியாய் பிரசங்கிப்பவனை அதற்காக தேவன் அவனை கணக்கொப்புவிக்கும்படி செய்வார்.** அது உண்மை. **தெய்வீக வரங்களோடு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏதோ ஒரு சபைக்கு பெயர் உண்டாக்கும்படியாகவோ அல்லது பெரிய கௌரவத்தை அடையும்படியாகவோ அல்லது தனக்கு ஒரு பெரிய பெயரை தேடிக் கொள்ளும்படியாகவோ முயற்சிக்கக்கூடாது.** நான் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களை நடத்திவிட்டு எங்கேயாவது ஒட்டிக் கொள்வதைக் காட்டிலும் தாழ்மையாயிருந்து தரித்திருக்கவே விரும்புவேன். நான் என்ன கூறுகிறேன் என்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்களா? சரி, ஐயா, **தேவன் தம்முடைய கரத்தை உங்கள் மேல் எங்கே வைக்கக்கூடுமோ, அங்கேயே உங்களுடைய ஸ்தானத்தை எப்பொழுதும் காத்துக் கொள்ளுங்கள்.**

இது உள்ளான ஜீவியமாயிருக்கிறது என்பது நினைவிருக்கட்டும்.

99. எனவே அந்நாளில் நான், “நான் மேலேறி நடந்து சென்று கொண்டிருக்கிறேன்” என்று எண்ணினேன். அந்த ஜனங்களைக் குறித்து அதிகமாய் எச்சரிப்படைந்து, பின்னர் நான், “அந்த மனிதர்களைக் குறித்து நான் கண்டறிவேன்” என்று எண்ணினேன். நான் வெளியே திறந்த வெளியில் கூட்டம் முடிந்தவுடன் அவர்களை கவனித்துக் கொண்டே இருந்தேன். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். அவர்களில் ஒருவரை கண்டுபிடித்தேன். அப்பொழுது நான் அவரிடத்தில், “ஐயா எப்படி இருக்கின்றீர்கள்?” என்று கேட்டேன்.

100. அதற்கு அவர், “நீர் எப்படி இருக்கிறீர் என்றும், இன்று காலையில் பிரசங்கித்த அந்த வாலிப பிரசங்கியார் நீர்தானே?” என்றும் கேட்டார்.

அதற்கு நான் ........ அப்பொழுது நான் இருபத்தி மூன்று வயதுடையவனாக இருந்தேன். எனவே நான், “ஆம் ஐயா” என்றேன்.

அதன் பின்னர் அவர், “உம்முடைய பெயர் என்ன?” என்று கேட்டார்.

அதற்கு நான், “பிரான்ஹாம்” என்றேன். பின்னர் நான், “உம்முடைய பெயர் என்ன?” என்று கேட்டேன்.

101. அவருடைய பெயரை என்னிடத்தில் கூறினார். அப்பொழுது நான், "நல்லது, இப்பொழுது அவருடைய ஆவியோடு என்னால் தொடர்பு கொள்ளக்கூடுமானால் நலமாயிருக்குமே" என்று எண்ணினேன். அதனை செய்துகொண்டிருக்கிறது எது என்பதை இன்னமும் அறியாதிருந்தேன். பின்னர் நான், "நல்லது, சரி ஐயா" என்று கூறி தொடர்ந்து, "நான் பெற்றிராத ஏதோ காரியத்தை இங்கே உள்ள ஜனங்களாகிய நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்" என்றேன்.

அதற்கு அவர், "நீர் விசுவாசியானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீரா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "நான் ஒரு பாப்டிஸ்ட்" என்றேன்.

102. அதற்கு அவரோ, "நீர் விசுவாசியான போதே பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டீரோ?" என்று கேட்டார்.

103. அதற்கு நான், "சரி சகோதரனே, நீர் என்ன கூறுகிறீர்?" என்று கேட்டேன். பின்பு நான், "நீங்கள் எல்லோரும் பெற்றிருப்பதை நான் பெற்றுக்கொள்ளவில்லை. நான் அதை அறிவேன்" என்றேன். மேலும் நான், "வல்லமையுள்ளதைப் போன்று காணப்படுகின்ற ஏதோ காரியத்தை

நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்" என்றேன். அதற்கு அவர், "நீங்கள் எப்பொழுதாவது அந்நிய பாஷையில் பேசியிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "இல்லை ஐயா" என்றேன்.

அப்பொழுது அவர், "அப்படியானால் நீர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை என்று என்னால் உடனடியாக கூறமுடியும்" என்றார்.

104. அப்பொழுது நான், "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள அது சம்பவிக்க வேண்டுமென்றால், அப்பொழுது நான் அதை பெற்றுக்கொள்ளவில்லை" என்றேன்.

105. ஆகவே அவர், "நீர் அந்நிய பாஷையில் பேசினதில்லையென்றால், நீர் அதை பெற்றிருக்கவில்லை" என்றார்.

106. அவருடைய உரையாடல் அந்தவிதமாயிருக்கையில், நான், "நான் அதை எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?" என்று கேட்டேன்.

107. அதற்கு அவர், "அங்கே இருக்கின்ற அந்த அறைக்குள் சென்று பரிசுத்தாவியை தேடத் துவங்குங்கள்" என்றார்.

108. **நான் தொடர்ந்து அவரை கவனித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா? நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.** ஆனாலும் அவர் ....... **அவர் ஒரு விநோதமான உணர்வை உடையவராயிருந்தார் என்பதை நான் அறிந்து கொண்டேன்.** ஏனென்றால் அவர் ........ அவர் என்னை நோக்கிப் பார்க்கும்போது அவருடைய கண்கள் சற்று கண்ணாடி போலிருந்தது. ஆனால் **அவர் ஒரு உண்மையான கிறிஸ்தவராய் இருந்தார்.** அது உண்மை. அப்பொழுது நான், "தேவனுக்கு ஸ்தோத்திரம். இதுதான் காரியம். நான் அந்த பீடத்தண்டை சென்றாக வேண்டும்" என்று எண்ணினேன்.

109. நான் வெளியே போய் சுற்றும் முற்றும் பார்த்தேன். அப்பொழுது நான், "அந்த இன்னொரு மனிதனையும் நான் கண்டுபிடிப்பேன்" என்று எண்ணினேன். நான் அவரை கண்டுபிடித்து அவரிடத்தில் பேசத் துவங்கியதும், "ஐயா, நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டேன்.

110. அதற்கு அவர், "நீர் எந்த சபையை சேர்ந்தவர்?" என்று கேட்டார். மேலும் அவர், "நீர்

ஒரு பாப்டிஸ்ட் என்று அவர்கள் என்னிடம் கூறுகிறார்களே" என்றார்.

அதற்கு நான், "ஆம்" என்றேன்.

அதற்கு அவர், "நீர் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லையே, நீர் பெற்றுவிட்டீரா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "எனக்குத் தெரியாது" என்றேன்.

அதற்கு அவர், "நீர் எப்பொழுதாவது அந்நிய பாஷையில் பேசியிருக்கிறீரா?" என்று கேட்டார். நான், "இல்லை ஐயா" என்றேன்.

அவர், "நீர் இன்னும் அதை பெற்றுக்கொள்ளவில்லை" என்றார்.

111. நான், "நீங்கள் யாவரும் பெற்றுள்ளதை நான் பெற்றிருக்கவில்லை என்பதை நான் அறிவேன். நான் அதை அறிவேன்" என்றேன். மேலும் நான், "ஆனால் என் சகோதரனே உண்மையாகவே அது எனக்கு வேண்டியதாயிருக்கிறது" என்றேன்.

அதற்கு அவர், "அங்கே தண்ணீர் தடாகம் ஆயத்தமாயிருக்கிறதே" என்றார்.

112. அப்பொழுது நான், "நான் ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன்" என்று கூறிவிட்டு, "ஆனால் நீங்கள் பெற்றுக் கொண்டதை நான் பெற்றிருக்கவில்லையே" என்றேன்.

மேலும் நான், "எனக்கு உண்மையாகவே தேவைப்படுகிற ஒன்றை நீங்கள் உடையவர்களாயிருக்கிறீர்கள்" என்றேன்.

அதற்கு அவர், "அது மிகவும் அருமையாயிருக்கிறது" என்றார்.

113. **நானோ அவரைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன்.** நீங்கள் பாருங்கள். **முடிவிலே நான் அவருடைய ஆவியைக் கண்டறிந்தேன்.** அது இன்னொரு மனிதனாயிருந்தது. நான் எப்பொழுதாவது ஒரு கீழ்த்தரமான மாய்மாலக்காரரோடு பேசியிருப்பேனேயானால் இவன் அவர்களில் ஒருவனாவான். அவனுடைய மனைவி ஒரு கறுத்த தலைமுடியை கொண்ட ஸ்திரீயாக இருந்தாள். ஆனால் அவரோ பழுப்பு நிற தலை முடியைக் கொண்ட ஒரு ஸ்திரீயுடன் ஜீவித்துக்கொண்டு, அவள் மூலம் பிறந்த இரண்டு பிள்ளைகளை உடையவனாயிருந்தான். அவன் குடிப்பதும், சபிப்பதும், மதுபான கடைக்கு ஓடுவது, மற்றெல்லா

காரியங்களையும் செய்துகொண்டு, அதே சமயத்தில் அங்கே அந்நிய பாஷையில் பேசிக்கொண்டும், தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டுமிருந்தான்.

114. பின்பு நான், "கர்த்தாவே, என்னை மன்னியும்" என்றேன். அதன்பின் நான் வீட்டிற்குச் சென்றேன். அது உண்மை. **மேலும் நான், "என்னால் அதை புரிந்து கொள்ள முடியவில்லையே." அந்த மாய்மாலக்காரன் மீதும் ஆசீர்வாதமான பரிசுத்த ஆவி இறங்குவது போன்று தென்படுகிறதே" என்று கூறிக்கொண்டேன்.** ஆயினும், நான், "அவ்வாறிருக்க முடியாதே! அவ்வளவுதான்," என்றும் கூறிக்கொண்டேன்.

115. அதன் பின்னர் நீண்ட காலமாக இதைக் குறித்து நான் ஆராய்ந்துகொண்டும், ஜெபித்துக்கொண்டும் இருந்தபோது, ஒருக்கால் அவர்களோடு வெளியே சென்றால், அவை யாவும் என்னவென்பதைக் குறித்து என்னால் கண்டறிய முடியும் என்றும் எண்ணினேன். **இதோ ஒருவன் அசலான கிறிஸ்தவனாயிருக்கிறான். இன்னொருவனோ ஒரு உண்மையான மாய்மாலக்காரனாய் இருக்கிறான்.** பின்னர்

நான், "இது என்னவாயிருக்கும்? ஓ" என்று எண்ணினேன். பின்பு நான், "தேவனே ஒருக்கால் என்னிடத்தில் ஏதோ காரியம் தவறாக இருக்கலாம்" என்று கூறினேன். நான் ஒரு அடிப்படைவாதியாயிருக்கிறபடியால், "அதை வேதத்தில் கண்டறிய வேண்டுமே. அது வேதத்தில் இருக்க வேண்டும்" என்றும் கூறிக்கொண்டேன்.

116. **என்னைப் பொறுத்தமட்டில் கிரியையில் வருகின்ற ஒவ்வொரு காரியமும் வேதத்திலிருந்தே வரவேண்டும். இல்லையென்றால் அது சரியானதல்ல. அது இங்கேயிருந்தே வரவேண்டும். அது வேதத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். ஆனால் அது வெறுமனே ஒரு இடத்தில் என்றில்லாமல் எல்லா விதங்களிலும் வேத்தினூடாகவே வரவேண்டும். நான் அதை விசுவாசித்தாக வேண்டும். அது ஒவ்வொரு வேத வார்த்தையோடும் ஒன்றாய் இணைய வேண்டும், ஒன்றாய் பொருந்த வேண்டும். இல்லையென்றால் நான் அதை விசவாசிப்பதில்லை.** அந்த காரணத்தினால்தான் பவுல், "வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப்

பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” என்றான். எனவே நான் வேதத்தை விசுவாசிக்கிறேன்.

மேலும், “அந்தவிதமாய் நான் வேதத்தில் ஒன்றையுமே காண முடியவில்லையே” என்றேன்.

117. இரண்டு வருடங்களுக்குப் பின்னர், நான் என்னுடைய மனைவி மற்றும் எல்லா காரியங்களையும் இழந்த பின்னர், நான் கிரீன்ஸ் மில் (Green's Mill) என்ற இடத்திற்குச் சென்று அங்கே உயரே இருக்கின்ற என்னுடைய சிறிய பழைய இடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். இரண்டு இல்லை மூன்று நாட்களாக, இரண்டு நாட்களாக அங்கே என்னுடைய குகையில் இருந்தேன். அப்பொழுது சற்று சுவாசிக்கும்படியாக காற்றைப் பெற நான் வெளியே நடந்து வந்தேன். நான் அங்கே வெளியே வந்து நடக்கும் போது, அங்கு இருந்த ஒரு மரக்கட்டையின் நுனியில் அதாவது உள்ளே வரும்போதுள்ள நுனியில் என்னுடைய வேதாகமத்தை வைத்திருந்தேன். ஒரு பழைய மரம் சாய்ந்து கிடந்தது. அதில் கிளை இரண்டாக பிரிந்திருந்தது. மரமானது கீழே விழுந்திருக்க இரண்டு கிளைகளும் மேல் நோக்கியவாறு இருந்தன. சில நேரங்களில் இந்த விதமாக உட்கார்ந்துகொண்டு இரவு நேரங்களில்

அப்படியே ஆகாயத்தையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பேன். என்னுடைய கரங்களை இந்தவிதமாக மேல் நோக்கியிருக்க சில நேரங்களில் ஜெபிப்பது போன்று மரக்கிளையின் மேல் உட்கார்ந்து தூங்கிக்கொண்டிருப்பேன், அங்கேயே பல நாட்கள் இருப்பேன். **அப்படியே புசிக்காமலும், குடிக்காமலும் அங்கேயே ஜெபித்துக் கொண்டேயிருப்பேன்.** நான் புதியதான காற்றை சுவாசிக்கும்படியாக குகையை விட்டு வெளியே நடந்து வந்தேன். அப்போது அங்கே அது குளிர்ச்சியாயும், ஈரமாயும் இருந்தது.

118. ஆக அதன்பின்பு நான் குகையை விட்டு வெளியே வந்து முந்தின நாள் வைத்த இடத்திலேயே என்னுடைய வேதாகமத்தை வைத்தபோது, அப்படியே எபிரேயர் 6-ம் அதிகாரத்திற்கு பக்கங்கள் திருப்பப்பட்டன. அப்போது நான் அந்த இடத்திலிருந்து வாசிக்கத் துவங்கினபோது, "செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் முதலான காரியங்களாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக" என்றிருந்தது. மேலும், "ஏனெனில் ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும்,

பரிசுத்த ஆவியைப் பெற்றும், மறுதலித்துப் போனவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" என்றிருந்தது. ஆனால் அதில் கீழே, "எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து முட்செடிகளையும், முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற்கேற்றதாயும் இருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" என்றிருந்தது.

அப்பொழுது ஏதோ ஒன்று "உஷ்ஷ்ஷ்" என்று கடந்து சென்றது.

119. நான், "இதோ அது இருக்கிறது. இப்பொழுது அவர் என்ன கூறினாலும் நான் ......... கவனித்துக் கேட்பேன் ......... அவர் இங்கே என்னை எழுப்பி விட்டார். அவர் இப்பொழுது எனக்கு ஒரு தரிசனத்தை கொடுக்கப் போகிறார்" என்று எண்ணிக்கொண்டேன். எனவே நான் அந்த மரத் துண்டின் முனையில் அங்கேயே அமர்ந்து காத்திருந்தேன். நான் எழும்பி நின்று முன்னும் பின்னுமாக, மேலும் கீழுமாக நடந்தேன். அப்போதும் ஒன்றுமே சம்பவிக்கவில்லை. மீண்டுமாய் என்னுடைய குகைக்கு நடந்து சென்றபோதும் ஒன்றும் சம்பவிக்கவில்லை. எனவே நான், அங்கேயே நின்று, பின்னர் நான்,

"சரி, இது என்னவாயிருக்கிறது?" என்று யோசித்துப் பார்த்தேன்.

120. நான் மீண்டுமாக என்னுடைய வேதத்தண்டைக்கு நடந்து சென்றேன். ஓ, அதில் மீண்டுமாய் பக்கங்கள் திரும்ப அதே இடத்திற்கு வந்தன. நான் அதை கரத்திலெடுத்தேன். பின்பு நான், "நான் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகின்றது என்ன அதில் இருக்கிறது?" என்று நினைத்தேன். நான் அதைத் தொடர்ந்து கீழே வாசிக்கலானேன். "தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், மனந்திரும்புதல்" முதலானவைகள் என்றிருக்க நான் தொடர்ந்து, "எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" என்று எழுதப்பட்டிருந்ததை வாசித்தேன். ஓ, அது என்னை அப்படியே அசைக்கக்கூடியதாயிருந்ததே!

121. அப்பொழுது நான், "கர்த்தாவே நீர் எதைக் குறித்ததான தரிசனத்தை எனக்கு கொடுக்கப்போகிறீர்" என்று எண்ணினேன். நான்

அங்கு வேறு ஒரு காரியத்தை அவரிடம் கேட்கப்போவதாக இருந்தேன்.

122. **பின்னர் சடுதியாக எனக்கு முன்பாக ஒரு உலகம் உருண்டு கொண்டிருப்பதை நான் கண்டேன். அது முழுவதும் உழுப்பட்டிருந்தது. வெண்மையான ஆடையணிந்த ஒரு மனிதன் தலை நிமிர்ந்த வண்ணமாய் இவ்விதமாக விதைத்துக் கொண்டே சென்றான். அவன் அவ்விதமாக ஒரு குன்றின் மேல் ஏறிப்போனவுடனே அவனைத் தொடர்ந்து இதோ இன்னொரு மனிதன் கறுப்பான ஆடை அணிந்தவனாய் தலை வணங்கினவாறு விதைகளை விதைத்துக் கொண்டு சென்றான். நல்ல விதைகள் முளைத்து வெளிவந்தபோது, அவை கோதுமைகளாயிருந்தன. கெட்ட விதைகள் வளர்ந்து வெளிவந்தபோது, அவை களைகளாயிருந்தன.**

123. அதன் பின்னர், பூமியின் மேல் ஒரு பெரிய வறட்சி உண்டானது. கோதுமை செடியின் தலை தொங்கிப்போய் தண்ணீர் தேவையினால் அழிந்துபோகும் நிலையிலிருந்தது. ஜனங்களெல் லோரும் கரங்களை உயர்த்தி, மழையை அனுப்பும்படி தேவனிடத்தில் ஜெபித்துக்

கொண்டிருக்கிறதை நான் கண்டேன். அதற்குப் பிறகு நான் களைகளைப் பார்த்தேன். அது அதின் தலையை தொங்கவிட்டுக் கொண்டு தண்ணீருக்காக தலை வணங்கிக் கொண்டிருந்தது. பின்னர் சரியாக பெரிதான மேகங்கள் குறுக்கே வந்து மழையை பொழிய ஆரம்பித்தன. அப்படி மழை பெய்தபோது அப்படியே முழுவதுமாக வளைந்து இருந்த கோதுமையானது "உஷ்ஷ்" என்று எழும்பி நின்றது. நேராக அதின் பக்கத்தில் இருந்த அந்த களையானதும் "உஷ்" என்று நிமிர்ந்து நின்றது.

அப்பொழுது நான், "அப்படியென்றால், அது என்னதான்?" என்று எண்ணினேன்.

124. பின்னர் அது எனக்கு புரிய வந்தது. இதுதான் காரியம். **கோதுமையை விளையச்செய்யும் அதே மழைதான் களையையும் வளரச்செய்கிறது. ஆகையால் அதே பரிசுத்த ஆவியே ஒருகூட்ட ஜனங்களின் மேலும் ஊற்றப்படவும், மற்றவர்களை ஆசீர்வதிப்பது போன்றே ஒரு மாய்மாலக்காரனையும் ஆசீர்வதிக்க முடியும்.** எனவே இயேசு, "**அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்**" என்றார். ஆக நாம் கூச்சலிடுவதோ,

**களிகூர்வதோ அல்ல, ஆனால் "அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்" என்பதேயாகும்.**

125. நான், "அதுதான் காரியம். எனவே கர்த்தாவே, நான் அதை புரிந்து கொண்டேன்" என்றேன். பின்பு நான், "அப்படியானால் அதுதான் உண்மையான சத்தியமாயிருக்கிறது" என்றேன். **எனவே தேவனை அறியாமலேயே நீங்கள் வரங்களை உடையவர்களாக இருக்கக்கூடும்.**

126. **ஆகையால் நான் அந்நிய பாஷையில் பேசுவதின் பேரில் அதிக கண்டிப்பாக இருந்தேன்.** நீங்கள் பாருங்கள், ஆனால் ஓர் நாள் எப்படியாய் தேவன் அதை எனக்கு ரூபகாரப்படுத்தினார்.

*செய்தி:* **எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார்,** ஜனவரி 17, 1955

★★★★★

# யோசேப்பை பாருங்கள்; அவன் உனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறான்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறு விதமான நோக்கங்கள் 61-0730 E

---

யோசேப்பு, தான் உயர்த்தப்படுவதற்கு முன்பாக, அவன் சோதனைக்குள்ளானான். அவன் நிரபராதியாயிருந்தும் சிறையில் அடைக்கப்பட்டான் என்பதை நினைவு பாருங்கள்.

எகிப்திய தேசத்தின் அதிபதியான போத்திபார் என்பவன் எங்கோ வெளியூருக்குப் போய்விட்டான். அவனுக்கு ஒரு

அழகிய மனைவி இருந்தாள். அவனது மனைவி யோசேப்பை வீட்டுக்குள் வந்து பார்க்கத்தக்கதான ஒரு வேளையை அவனுக்குக் கொடுத்தாள். அந்த நேரத்தில் பார்த்து, யோசேப்பு தவறான காரியத்தை செய்யும்படி செய்ய முயற்சித்தாள். அவனோ தேவனுக்கு உண்மையாயிருந்தான். நான் உங்களுக்கு கூறுகிறேன், அவர்கள் எப்பொழுதும்...





ஸ்திரீகளே, நான் எப்பொழுதும் உங்களைக் குறித்து சப்தமிட்டுக் கடிந்து கொள்வதுண்டு. இப்பொழுது இன்னும் ஒரு நிமிட நேரத்தில் உங்கள் சார்பாகப் பேசப்போகிறேன். ஸ்திரீயானவள் எப்பொழுதும் ஒரு பெலவீன பாத்திரமாய் இருக்கிறாள். ஒரு கெட்ட ஸ்திரீ இருக்காமல்

இருக்கும்போது, அப்போது ஒரு கெட்ட மனிதனும் இருக்கமாட்டான் என்பதை நான் அறிவேன். ஆனால் அதை அறிந்திருக்கிற மனிதனே, நீ ஒரு தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருக்கிறாய், அப்படியிருந்தும், ஸ்திரீயின் பெலவீனத்தை சாதகமான எடுத்துக்கொண்டால் அதற்காக நீ தலை குனிய வேண்டும். அவள் என்ன செய்கிறாள் என்பது காரியமல்ல, அவள் ஒரு பெலவீன பாண்டம், நீ அதை அறிவாய். ஸ்திரீக்குரிய இலட்சணத்தோடு அவள் நடந்துகொள்ளாவிடில் அவள் கையைப் பிடித்து அவளை

சகோதரியாகப் பாவித்து, அவளோடு பேசு. நீ ஒரு தேவகுமாரனாயிருக்கிறாய். அவர்களுக்கு நீ பொல்லாங்கான காரியங்களைக் செய்ய வேண்டாம். யோசேப்பை பாருங்கள்; அவன் உனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறான்.

அத்தேசத்திலேயே மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த அந்த கனம் பொருந்திய ஸ்திரீயாகிய போத்திபாரின் அவ்வழகிய மனைவியானவள், அவனை கெஞ்சினாள், அவனைத் தூண்டினாள், அவனோ விலகிபோனான். அவள் அவனைப்

பிடித்திழுத்து தன்னோடு தழுவிக் கொள்ளும்படி செய்ய முயற்சித்தாள்; அவனோ அவளிடத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான்.



அவள் பிடியிலிருந்து வலுவாக அவன் தன்னை இழுத்துக்கொண்டபோது, அவனது மேலாடை கூட அவனை நழுவி விடும் அளவுக்கு ஆகி விட்டது; இப்படியாக அவன் அவளை விட்டு விலகி ஓடிப்போனான். ஆம் ஐயா!

அவள் கணவன் வந்தபோது, அவனிடம், அவன் அவளை கெடுக்க வந்ததாகவும், தன்னுடைய மேலாடையைக் கூட தன்னிடத்தில் விட்டு விட்டு ஓடிப்போனான் என்றும் அவர்கள் பொய் கூறினார்கள்.

~ 9 ~



அதனால் அவன் சிறைசாலைக்கு போகும்படி நேர்ந்தது. ஆனால் அவர்கள் அவனை எங்கு போட்டிருந்த போதிலும் தேவன் அவனோடு அச்சிறைச்சாலையில் இருந்தார். அவன் அந்த செழிப்பின் குமாரனுக்கு முன்னடையாளமாயிருந்தான்.

★★★★★

**நாம் தினந்தோறும் ஜெபிக்கவில்லையென்றால், எல்லா நேரமும் இரத்தத்தின் கீழ் நம்மை வைக்கவில்லையென்றால், உன்னுடைய கிறிஸ்தவ அனுபவத்தில் உலர்ந்து போய், மரித்துவிடுவாய்.**

*நீ இதை விசுவாசிக்கிறாயா?, 50-0716, பத்தி எண் E-64*

வில்லியம் மரியன் பிரன்ஹாம்



*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


**சகோ. பினேகாஸ்**
**போன்: 8838623242,**
**9551855108**
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in